பக்கங்கள்:11

விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 28 சனிக்கிழமை 11.06.2022 கதிர் 218

**இனி இது ரகசியம் அல்ல!**

பஸில் ராஜபக்ஷவின் இடத்துக்கு மொட்டுக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு பிரபல கோடீஸ்வர வர்த்தகரான தம்மிக பெரேராவை நியமிக்கும் ஆளும் தரப்பின் முடிவு பல சர்ச்சைகளுக்கு வழிவகுக்கப் போகின்றது

☞ 2

# மரபை மீறினார் ரணில்!

## சுமந்திரன், சாணக்கியன் காட்டம்





கொழும்பு, ஜூன் 11

நாடாளுமன்றத்தில் அதன் உறுப்பினர் ஒருவரின் மறைவையொட்டிய அனுதாபப் பிரேரணை மீதான உரை நிகழ்வில் வேறு அரசியல் சர்ச்சைகள், விடயங்கள் பேசுவதேயில்லை என்ற நாடாளுமன்ற மரபு மற்றும் சம்பிரதாயங்களை மீறி, அற்பத்தனமான அரசியல் விவகாரங்களை அச்சமயம் ஒன்றுக்கு இரண்டு தடவைகள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பேசி இருக்கிறார் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், இரா.சாணக்கியன் ஆகியோர் பகிரங்கமாகக் குற்றம் சுமத்தி இருக்கிறார்கள்.

☞ 03

## வவுனியா கிணற்றில் யுவதியின் சடலம்

வவுனியாவில் கிணற்றில் இருந்து இளம் குடும்ப பெண்ணின் சடலம் ஒன்று நேற்று இரவு 7.45 மணியளவில் மீட்கப்பட்டுளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்தப் பெண்ணின் கணவரும், இரு பிள்ளைகளும் லண்டனில் வசித்து வரும் நிலையில் கடந்த 7 மாதங்களுக்கு முன்னர் லண்டனில் இருந்து வருகை தந்து வவுனியா, தோணிக்கல், ஆலடி

☞ 2

## திங்களன்று விடுமுறை பாடசாலைகளுக்கும்!

எதிர்வரும் 13ஆம் திகதி திங்களன்று அரசாங்க விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற அனைத்துப் பாடசாலைகளுக்கும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை விசேட விடுமுறை வழங்கப்பட்டுள்ளது என கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

சனி, ஞாயிற்றுக் கிழமையை அடுத்து செவ்வாயன்று போயா விடுமுறை வருவதால் – தற்போதைய நெருக்கடி நிலைமையைக் கருத்தில் கொண்டு – இடையில் உள்ள திங்கட்கிழமையும் விடுமுறை கொடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

## இந்திய எக்ஸிம் வங்கி ஊடாக டொலர் கடன் பெற ஒப்பந்தம்



இந்திய எக்ஸிம் வங்கி ஊடாக டொலர் கடனைப் பெறுவதற்கான ஒப்பந்தத்தில் நிதி

☞ 03

## பஸிலின் இடத்துக்கு தம்மிக்க பெரேரா

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக தம்மிக்க பெரேராவை நியமித்து விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியானது.

தேர்தல்கள் ஆணைக் குழுவினால் இந்த விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

தம்மிக்க பெரேராவின் பெயர் தேசியப்பட்டியல் நாடாளுமன்றஉறுப்பினர் பதவிக்காக சிறிலங்கா பொதுஜன

☞ 03

## கறுப்புப் பட்டியுடன் அரசாங்க எம்.பிக்கள்



வன்முறையாளர்கள் சிலரால் நித்தம்புவையில்படுகொலைசெய்யப்பட்ட பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரளவின் கொலைக்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்காக

☞ 2

## பல்கலை மாணவரைக் கலைக்க கண்ணீர்ப் புகைக்குண்டு வீச்சு



அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் இணைந்து பத்தரமுல்லையில் அமைந்துள்ள கல்வி அமைச்சுக்கு முன்பாக நேற்று நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது எல்லை மீறிய மாணவர்களைத் துரத்துவதற்கு பொலிஸார் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசினர்.



பல்கலைக்கழகங்களுக்கிடையிலான மாணவர் சம்மேளனத்தின் எதிர்ப்பாளர்கள் பொலிஸ் தடைகளை மீறி கல்வி அமைச்சுக்குள் நுழைய முயற்சித்தவேளை. பொலிஸார் கண்ணீர் புகை குண்டுகளை வீசி, அவர்களைக் கலைத்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

☞ 2

## சிசுவின் சடலம் வீதியோரம் மீட்பு



லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாக சேனை வலகா தோட்டத்துக்கு செல்லும் பிரதான வீதியில் ஆறுமாதம் குறிப்பிடத்தக்க சிசுவின் சடலம் நேற்றுக்காலை 11மணிக்கு லிந்துலை பொலிஸார் மீட்டுள்ளனர்.

பாதையின் ஊடாக சென்றநபர்கள்சிசுவொன்று இறந்து

☞ 03

## கதிரையிலிருந்து 1 வயதுக் குழந்தை விழுந்து மரணம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜூன் 11

முழங்காவில் பகுதியில் நேற்றைய தினம் ஒரு வயது குழந்தை கதிரையில் இருந்து இறங்கிய சமயம் தவறி வீழ்ந்து பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

☞ 2

## தீக்காயங்களுக்கு உள்ளான இரு குடும்பப் பெண்கள் சாவு

யாழ்பாணத்தில் இருவேறு சம்பவங்களில் தீக்காயங்களுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட இரு குடும்ப பெண்கள் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணம்

☞ 2

## சுதந்திரபுரம் படுகொலையின் 24ஆம் ஆண்டு நினைவு நேற்று




முல்லைத்தீவு சுதந்திரபுரம் படுகொலையின் 24ஆம் ஆண்டு நினைவு நாள் உணர்வு பூர்வமாக நினைவு கூரப்பட்டாது.

1998ஆம் ஆண்டு, ஜூன் மாதம் 10ஆம் திகதி, சுதந்திரம்

☞ 2

## இருபாலையில் புதையல் தோண்ட முயன்ற 6 தெற்குவாசிகள் கைது!

### வீட்டுக்காரரும் வசமாகச் சிக்கினார்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜூன் 11

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உள்பட்ட இருபாலையில் வீடொன்றில் தங்கம் புதைக்கப்பட்டிருப்பதாகத்

☞ 03

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...) என்பது நிச்சயம்.

அரசியல் சர்ச்சைகள் ஒருபுறம் என்றால், சட்ட சர்ச்சைக்கு மறுபுறம் வாசல் திறக்கப்பட்டுள்ளது.

அவரது எம்.பி. நியமனத்துக்கு எதிராக நீதிமன்றத்துக்குச் செல்வதற்குப் பல தரப்புகள் தயாராகி வருகின்றன என்று செய்திகள் கிட்டியிருக்கின்றன.

அவர் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் எந்தக் கட்சியின் சார்பிலும் வேட்பாளராக இருந்தவர் அல்லர். அது மாத்திரமல்ல. எந்த இடத்திலும் அவரது பெயர் வாக்காளராகத்தன்னும் பதியப் பட்டிருக்கவில்லை என்றும் கூறப்படுகின்றது.

ஒருவரின் பெயர் வாக்காளராக அதற்குரிய பட்டியலில் பதியப் படாவிட்டாலும், அவர் வாக்காளராக இருப்பதற்குரிய தகுதிகளைக் கொண்டிருப்பின் அவர் தேர்தலில் போட்டியிடவோ தெரிவுசெய்யப்படவோ இடம் உண்டு. அதைத் தடுக்க முடியாது.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட சமயம் அத்தேர்தலில் அவர் வாக்களிக்க முடியவில்லை. ஏனெனில் அவரின் பெயர் அந்த வருடத்துக்குரிய வாக்காளர் பட்டியலில் எங்கும் பதியப்பட்டிருக்கவில்லை. ஆனால் அப்படி வாக்காளராகப் பதிவதற்குரிய அனைத்துத் தகுதிகளும் அவருக்கு இருந்தமையால் அவர் அந்தத் தேர்தலில் போட்டியிட முடிந்தது.

ஆகவே தம்மிக்க பெரேராவின் பெயர் வாக்காளர் பட்டியலில் இல்லை என்பதைக் காட்டி அவரைப் பதவி நீக்கம் செய்யக் கோர முடியாது. ஆனால் வேறு காரணங்களின் அடிப்படையில் அவரது நியமனத்தை ஆட்சேபித்து நீதிமன்றத்திற்குச் செல்ல பல தரப்புகள் தயாராகி விட்டன எனத் தெரிகிறது.

கடந்த தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடாத பஸில் ராஜபக்ஷ பின்னர் தேசியப்பட்டியலில் நியமிக்கப்பட்டார். ஆயினும் அதை ஆட்சேபித்து அப்போது யாரும் நீதிமன்றத்திற்குச் செல்லவில்லை. அதற்கு ஒரு விசேட காரணம் உண்டு. தாம் எப்படியும் நாடாளுமன்ற உறுப்பினராகி, நிதியமைச்சருமாகிவிட வேண்டும் என்பதில் பஸில் அப்போது அதீத ஈடுபாடு காட்டி இருந்தார். அச்சமயத்தில் அதை ஆட்சேபித்து நீதிமன்றுக்குச் சென்றால் ஏதோ ஒரு வகையில் – சாம, பேத, தான, தண்ட முறைகளைப் பாவித்து அந்த முயற்சியை பஸில் அப்போது முறியடிப்பார் எனப் பலரும் அஞ்சினர். அச்சமயத்தில் அத்தகைய தீர்ப்பு ஒன்றை நீதிமன்றத்திடம் இருந்து பஸிலுக்குச் சார்பாகப் பெறக் கூடிய சாத்திய சூழலும் இருந்தது என சம்பந்தப்பட்டோர் கருதினர். அப்படி ஒரு தீர்ப்பு நீதிமன்றத்தில் இருந்து வந்து விட்டால், அது பிற்காலத்தில் முன்மாதிரி வழிகாட்டல் தீர்ப்பாகி விடும் என்று கருதி அந்த விஷப் பரீட்சைக்கு – பஸிலின் எம்.பி. பதவி நியமனத்துக்கு – எதிராக அப்போது எந்தத் தரப்பும் நீதிமன்றத்துக்குச் செல்லவில்லை – பல முக்கிய அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் உட்பட.

ஆனால், இப்போது தம்மிக்க பெரேராவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப் படக்கூடிய வழக்குகளின் நிலைமை வேறுவிதமானது. தங்களுக்குச் சார்பான மேலும் பல கருத்து நிலைகள் இருக்கின்றன என வழக்குப் போடக்கூடிய – போடத் தயாராகின்ற – தரப்புக்கள் கருதுகின்றன. தேர்தலுக்கான வேட்பாளர் பட்டியலில் இல்லாத தம்மிக பெரேரா ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட முடியாது என்ற கருத்து நிலைப்பாட்டுக்கு அப்பால், அவருடைய வர்த்தக சாம்ராஜ்ஜிய தொடர்புகளைக் காட்டி அவரைப் பதவி இழக்க வைக்கும் முயற்சியில் சம்பந்தப்பட்ட தரப்புகள் நீதிமன்றத்தின் கதவைத் தட்டத் தீர்மானித்து இருக்கின்றன என்று தெரிகிறது. அரசாங்கத்தோடு பலமுனைகளில் அவரது நிறுவனங்கள் வர்த்தகத் தொடர்பில் இருக்கின்றன. அந்த வர்த்தக நிறுவனங்களின் பணிப்பாளர் பதவிகளிலிருந்து தம்மிக பெரேரா விலகிக் கொண்டாலும், அந்த நிறுவனங்களில் அவரின் முதலீடுகள் தொடரும் என்பது சம்பந்தப்பட்ட சட்ட வட்டாரங்களினால் சுட்டிக் காட்டப்படுகின்றது. இந்தப் பின்புலத்தில் Conflict of interest என்ற அடிப்படையில் அவரது நியமனத்துக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்து, அவரது எம்.பி. நியமனத்தை முறியடிக்க முடியும் என்று சட்ட வட்டாரங்கள் கருதுகின்றன. அதுவும் அவர் எம்.பியானதும் அமைச்சர் பதவியையும்ஏற்பார்எனக்கருதப்படுகின்றமையால் அது தங்கள் வழக்குக்கு மேலும் சாதகமாக அமையும் என அவர்கள் கருதுகின்றனர்.

அவரின் பல பெரிய வர்த்தகங்கள் அரசுடன் பல முனைகளில், பல துறைகளில் வர்த்தக முயற்சிகளில் ஈடுபட்டிருக்கையில், அவர் அமைச்சராகப் பணியாற்றும் போது, அமைச்சருக்கும் அவரது நிறுவனத்துக்கும் இடையிலான விடயங்களைக் கையாளும் போது Conflict of interest என்ற பிரச்சினை வரும் என்பதை தமக்கு சார்பான விடயமாக வழக்குப் போடும் தரப்புகள் பயன்படுத்தவுள்ளன.

அடுத்த ஒரு வாரத்துக்குள் இதற்கான வழக்குகள் நீதிமன்றத்திற்கு வரக் கூடிய சாத்தியம் உண்டு.

நாடாளுமன்றத்திற்கு வரும் தம்மிக பெரேரா அரசியல் சதுரங்கத்தில் சிக்க முன்னர் சட்ட, நீதித்துறை சதுரங்கத்தில் அல்லல் படவேண்டிய கஷ்டங்கள் காத்திருக்கின்றன என எனக்குத் தோன்றுகின்றது. பார்ப்போம் என்ன நடக்கப் போகின்றது என்பதை.

– மின்னல் –

## தீக்காயங்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...) மருதங்கேணி உடுத்துறை பகுதியை சேர்ந்த பிரபாகரன் பிறேமலதா (வயது 43) என்ற பெண் ஒருவர் கடந்த 08 ஆம் திகதி தீக்காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், அன்றைய தினமே சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவர் யாழ்ப்பாணம் சென். சாள்ஸ் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்பித்து வந்த நிலையில், சுகவீனம் காரணமாக ஆசிரிய பணியில் இருந்து ஓய்வு பெற்றவர் என உறவினர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை யாழ்ப்பாணம் உடுப்பிட்டி பகுதியை சேர்ந்த ஒரு பிள்ளையின் தாயாரான சுதாகரன் துளசிகா (வயது 28) என்பவர் கடந்த 6ஆம் திகதி தீ காயங்களுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் 8ஆம் திகதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

## கதிரையிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...) முழங்காவில் வைத்தியசாலை வீதியில் வசிக்கும் ராகவன் என்பவரது ஒரு வயது

ஆண் குழந்தையை தாயார் கதிரையில் இருந்திவிட்டு உணவு தயாரிப்பில் ஈடுபட்டுள்ளார். இதன்போது கதிரையில. இருந்த குழந்தை கீழே இறங்க முற்பட்ட சமயம் தலையின் பின்பகுதி அடிபட வீழ்ந்துள்ளது.

உடனடியாக குழந்தையை முழங்காவில் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றபோதும் வைத்தியசாலையில் அனுமதிக்க முன்பே குழந்தை இறந்தமையை வைத்தியர் உறுதி செய்துள்ளார்.

குழந்தையின் உடலம் பரிசோதனைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளது.

## கறுப்புப் பட்டியுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...) அந்தக் கட்சியை சேர்ந்த அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் நேற்றுக் கறுப்புப் பட்டியை அணிந்து நாடாளுமன்ற அமர்வுக்கு சென்றுள்ளனர்.

அதேவேளை முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் கறுப்புப் பட்டியை அணிந்து அவையில் அமர்ந்திருந்தமையைக் காணக் கூடியதாக இருந்தது.

பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் பிரதீத பண்டார தென்னகோன், மஹிந்த ராஜபக்ஷவின் கையில் கறுப்புப் பட்டியைக் கட்டி விட்டுள்ளார்.

அமரகீர்த்தி அத்துகோரள கடந்த மே மாதம் 9 ஆம் திகதி நித்தம்புவையில் நடந்த வன்முறை சம்பவத்தில் கொலை செய்யப்பட்டார். இந்த சம்பவம் தொடர்பாக இதுவரை 21 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# 11 ஆவது 'இந்துக்களின் போர்'; யாழ் இந்து வலுவான நிலையில்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மற்றும் கொழும்பு இந்துக் கல்லூரி அணிகளுக்கிடையிலான 11 ஆவது இந்துக்களின் போர் மாபெரும் துடுப்பாட்டப் போட்டி யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மைதானத்தில் நேற்றையதினம் ஆரம்பமாகியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணித் தலைவர் கஜனந் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணியினர் தமது முதலாவது இனிங்ஸிற்காக துடுப்பெடுத்தாட ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக அர்ஜன் மற்றும் ராகுல் ராவிட் இணையை களமிறக்கியது. முதலாவது பந்துப் பரிமாற்றத்தின் இரண்டாவது பந்தில் நான்கு ஓட்டங்களுடன் தமது ஓட்ட எண்ணிக்கையை ஆரம்பித்த யாழ் இந்துக் கல்லூரி அணி, 04 ஓட்டங்களைப் பெற்றிருந்த போதே தமது முதலாவது இலக்காக ராகுல் ராவிட்டை ஓட்டம் எதுவும் பெறாமல் இழந்தது. பின்னர் இரண்டாவது இலக்கு இணையாக அர்ஜனுடன் இணைந்த ஙம்சன் நிதானமான முறையில் ஆட்டத்தை கொண்டு சென்று இரண்டாவது இலக்கு இணை 55 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் அர்ஜன் 22ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார்.

பின்னர் வந்த வீரர்களான, பிரசித் 0, சுபர்ணன் 5, கஜன் 9, கஜானந் 0 என ஒற்றை இலக்கங்களுடன் ஆட்டமிழக்க மறுமுனையில் நிதானமாக துடுப்பாடிய ஙம்சன் அணி 128 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது 77 ஓட்டங்களை சிறப்பாக பெற்று ஆட்டமிழந்து வெளியேறினார்.

பின்னர் துடுப்பெடுத்தாட களமிறங்கிய விதுசன் 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க களத்தில் பிரியந்தன் – கிருசாந் ஜோடி ஒன்பதாவது இலக்குக்காக நிதானமாகவும் சிறப்பாகவும் தமது இணையை கொண்டு நகர்த்தி அணியினை 230 என்ற ஓட்ட எண்ணிக்கையை எட்ட வைத்தது. இறுதியில் பிரியந்தன் 58 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இறுதி வரை ஆட்டமிழக்காது களத்தில் இருந்த கிருசாந் 30 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

கொழும்பு இந்துக் கல்லூரி அணி சார்பாக சஜிதரன் 05 இலக்குகளையும், சதுர்ஜன் 02இலக்குகளையும் ஸ்ரீ ஹரிகரன் மற்றும் மிதுசிகன் தலா 01 இலக்கினையும் வீழ்த்தியிருந்தனர்.

இந்நிலையில் முதலாவது இனிங்ஸில் தமது ஆதிக்கத்தை நிலைநாட்ட 230 ஓட்டங்களை கடக்க வேண்டிய நிற்பந்தத்தில் களமிறங்கிய கொழும்பு இந்துக் கல்லூரி அணி முதலாவது நாள் முடிவில் 81 ஓட்டங்களுக்கு 03 இலக்குகளை இழந்திருந்தது. கொழும்பு இந்துக் கல்லூரி சார்பில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய டிலக்சன் 34 ஓட்டங்களுடனும் ஐந்தாம் இலக்கத் துடுப்பாட வீரராக களமிறங்கிய சஜீதரன் 18 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது உள்ளனர். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சார்பாக பரதுவசன் 02 இலக்குகளையும் கஜனந் 01 இலக்கினையும் வீழ்த்தியுள்ளனர்.

ஆட்டத்தின் இரண்டாவதும், இறுதியுமானநாள் இன்றாகும்.

## வவுனியா கிணற்றில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...) வீதியில் வசித்து வந்த நிலையிலேயே அவரது சடலம் கிணற்றில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

வீட்டில் அந்தப் பெண்ணைக் காணவில்லை என உறவினர்கள் தேடிய போது கிணற்றில் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது. அப்பகுதி இளைஞர்கள், பொது மக்களின் உதவியுடன் சடலம் மீட்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

முப்பது வயதுடைய இந்துஜா என்ற பெண்ணே இவ்வாறு மீட்கப்பட்டவராவார். அவரது சடலம் வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...) மகாபொல புலமைப்பரிசில் வழங்கப்படாமையைச் சுட்டிக்காட்டியும் மற்றும் பல்கலைக்கழக சிற்றுண்டிச்சாலையில் உணவுகளின் விலைகள் அதிகரிக்கப்பட்டமையைக் கண்டித்தும் மேலும் சில கோரிக்கைகளை முன்வைத்தும் இந்த போராட்டம் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

## சுதந்திரபுரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...) பகுதியில் இலங்கை இராணுவத்தின் விமானத் தாக்குதல் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட ஷெல் தாக்குதல்களில் அநியாயமாக படுகொலை செய்யப்பட்ட 33 அப்பாவி பொது மக்களுடைய 24 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுநேற்று உணர்வு பூர்வமாக இடம்பெற்றது.

நேற்றுக் காலை பத்து மணிக்கு சுதந்திரபுரம் நிரோஜன் விளையாட்டுக் கழக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள விசேட நினைவிடத்தில் உணர்வு பூர்வமாக இவ் அஞ்சலி நிகழ்வு நடாத்தப்பட்டது.

அஞ்சலி நிகழ்வில் பொதுச்சுடரினை அந்தத் தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பிள்ளைகளைப் பறிகொடுத்த தந்தையாரான புஷ்பநாதன் ஏற்றிவைத்தார்.

அதனைத் தொடர்ந்து ஏனையவர்களும் திருவுருவப் படத்துக்கு சுடர் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். நிகழ்வில் அஞ்சலி உரைகளும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் பிரதேச சபை உறுப்பி னர்களான ஜோன்சன், ஜீவன் தாக்குதலில் தமது உறவுகளை பறிகொடுத்தவர்களின் உறவினர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



காலைக்கதிர் Kalaikkathir

## மரபை மீறினார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கடந்த மாதம் 10 ஆம் திகதி நித்தம்புவையில் படுகொலை செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துக்கோரளவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணை மீதான நாடாளுமன்ற விவாதம் நேற்று மன்றில் நடைபெற்றது.

அங்கு உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்ற மரபுகளை மீறினார் எனக் கூறப்படுகின்றது.

அமரரான நாடாளுமன்ற உறுப்பினரின் உறவினர்கள் உட்பட எல்லோரும் சபையில் பார்வையாளர்களாகப் பிரசன்னமாகியிருக்கும் போது அற்பத்தனமான அரசியல் விடயங்கள், சர்ச்சைகள் கிளப்புவதை விடுத்து, அமரர் பற்றிய விடயங்களை மாத்திரமே பேசுவது நாடாளுமன்ற பாரம்பரியம், பண்பு, மரபு.

ஆனால் நேற்று அந்த மரபைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மீறினார் எனக் கூறப்படுகின்றது. அனுதாபப் பிரேரணை மீதான தமது உரையை சாணக்கியன் எம்.பியைத் தாக்குவதற்கான அரசியல் தளமாக அவர் பயன்படுத்தினார்.

மே மாதம் 9ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பில் நாடாமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் முன்னர் ஆற்றிய உரையில் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டுமென அனுதாப உரையில் கோரினார் ரணில்.

“20ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டம் மற்றும் நாட்டுக்கு எதிரான ஏனைய கொள்கைகளுக்கு ஆதரவாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களித்தமையினால்தான் அவர்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன என நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் கூறினார். மக்களுக்குத் துரோகம் இழைத்ததற்காகவே அவர்களது வீடுகள் தாக்கப்பட்டன என்பதை அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்” – என்று இராசமாணிக்கத்தின் உரையை மேற்கோள் காட்டி விக்கிரமசிங்க வாசித்தார்.

(பிரதமரின் உரை பற்றிய செய்தி பக்கத்தில் தனியாக...)

இராசமாணிக்கம் முன்னர் ஆற்றிய உரையில் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டுமெனவும் பிரதமர் கோரினார்.

அடுத்த நாடாளுமன்ற அமர்வு முடிவதற்கு முன்னர், முன்பு தான் தெரிவித்த கருத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் மன்னிப்பு கேட்க வேண்டும், இல்லையேல் சபாநாயகர் விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டும் எனவும் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

### அமைதியாக இருந்த சுமந்திரன்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வளவு உரையையும் ஆற்றிய சமயத்தில் நாடாளுமன்றில் சுமந்திரன் அமைதியாக அமர்ந்திருந்தார். அவர் எந்தக் குறுக்கீடும் செய்யவில்லை.

அதன் பின்னர் சபாநாயகர் தலைமையில் நாடாளுமன்ற அலுவல்கள் குழுவின் கூட்டம் சபாநாயகரின் அறையில் நடைபெற்றது. நாடாளுமன்றம் ஒரு வாரத்தின் பின்னர் மீண்டும் கூடும் போது மேற்படி அனுதாபப் பிரேரணை மீதான உரைகள் தொடரும் என்றார் சபாநாயகர். அப்போது குறுக்கிட்ட சுமந்திரன், நாடாளுமன்றத்தின் வழமையான சம்பிரதாயங்களுக்கு மாறாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அனுதாபப் பிரேரணை மீதான உரையில் அற்பத்தனமாக அரசியல் பேசி இருக்கிறார் என்று சுட்டிக் காட்டினார். மீண்டும் இந்தப் பிரேரணை மீதான உரை அடுத்ததற்கு அடுத்த வாரத்தில் எடுக்கப்படும்போது அதற்கான தவறை பிரதமரிடம் சுட்டிக் காட்டுங்கள் என்று குறிப்பிட்டு அந்தக் குழுவின் உத்தியோகபூர்வமான அறிக்கையில் அக் கருத்தைப் பதிவு செய்தார் சுமந்திரன்.

இதன் பின்னர் மீண்டும் நாடாளுமன்றம் கூடி அனுதாபப் பிரேரணை மீதான உரைகளைத் தொடர்ந்த சமயம் திரும்பவும் குறுக்கிட்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தாம் முன்னர் உரையாற்றியபோது சபையில் இருந்த சுமந்திரன், தன்னுடைய ஆட்சேபத்தை சபையில் சுட்டிக்காட்டாமல் அதற்குப் பதிலாக அலுவல்கள் குழுவின் கூட்டத்தில் போய் அதற்கான ஆட்சேபக் கருத்தை பதிவு செய்திருக்கிறார் என்றார்.

இதன் பின்னர் உரையாற்ற முயன்ற சாணக்கியன் எம்.பி., பிரதமரின் உரை தொடர்பில் தனது விளக்கத்தை அளிக்க முயன்றார். ஆனால் அச்சமயத்தில் அனுதாபப் பிரேரணை மீது அத்தகைய விளக்கங்கள், வேறு விடயங்கள் பேச அனுமதிக்க முடியாது எனத் தெரிவித்து அந்த விளக்கத்தை அளிக்க விடாது சாணக்கியன் தடுக்கப்பட்டார்.

இதன் பின்னர் சாணக்கியன் சுமந்திரனும் நாடாளுமன்றிற்கு வெளியில் இவ்விடயங்களை ஒட்டிக் கருத்து வெளியிட்டனர்.

### சுமந்திரனின் ட்டுவீட்

இவ்விடயத்தை ஒட்டி பின்னர் ட்விட்டர் மூலம் கருத்து வெளியிட்டார் சுமந்திரன்.

“அனுதாபப் பிரேரணை மீதான உரைகளில் வேறு விடயங்கள் பேசுவதே இல்லை. அந்த மரபைப் பிரதமர் இரண்டு தடவைகள் மீறினார். அத்தகைய மரபை நான் மீறக் கூடாது என்பதற்காக அச்சமயத்தில் நான் எழுந்து ஆட்சேபித்துக் கருத்து வெளியிட முயலவில்லை. ஆனால் பின்னர் விளக்கமளிக்க முயன்ற சாண்க்கியன் எப்படித் தடுக்கப்பட்டார் என்பதைப் பாருங்கள்” – என்று அந்த டுவிட்டர் செய்தியில் சுமந்திரன் குறிப்பிட்டிருந்தார்.

### சாணக்கியன் காட்டம்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த 6 தடவைகள் பிரதமராக இருந்த போதும், மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோறளவுக்கான அனுதாபப் பிரேரணை தினத்தை தனது அரசியல் நிகழ்ச்சி நிரலுக்காக நாடாளுமன்ற மரபுகளை மீறி பயன்படுத்தினார் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றஉறுப்பினர்சாண்ச்க்கியன் இராசமாணிக்கம் குற்றம் சுமத்தினார்.

நேற்றுப் பகல் செய்தியாளர்களிடம் பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பிரதமருக்கு நாடாளுமன்ற சட்டம், மரபுகள் நன்கு தெரியும். அவர் கடந்த காலத்திலும் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அவர் தனது சொந்த அரசியல் நோக்கத்திற்காகவும், மக்க ளின் மனதைத் தூண்டுவதற்காகவும் இப்படிக் குற்றச்சாட்டுகளை முன்வைத்தார். குறிப்பாக உணர்ச்சிகள் அதிகமாக இயங்கும் நாளில் இது தேவையற்றது. அவர் தனது சொந்த அரசியல் நிகழ்ச்சி நிரலுக்காக இதை வெளிப்படையாகக் கொண்டு வந்தார். இது அனைவருக்கும் தெளிவாகத் தெரியும். – என்று சாணக்கியன் இராசமாணிக்கம் கூறினார்.

## இருபாலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்து தோண்ட முற்பட்ட ஏழு பேர் யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத் தடுப்பு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வீட்டு உரிமையாளர் மற்றும் தென்னிலங்கையைச் சேர்ந்த 6 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த வீட்டின் வளாகத்தில் பல கோடி ரூபா பெறுமதியான தங்கத் தகடு புதைத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, அதனைத் தோண்டி எடுக்கும் முயற்சியில் அவர்கள ஈடுபட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களிடமிருந்து வெடிமருந்து மற்றும் உபகரணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

மின் பயன்பாடு அற்ற டெட்டினேற்றர்கள், மின் டெட்டினேற்றர்கள், யூரியா, யூரியாவை வெடிமருந்தாக மாற்றும் ஜெல், கொங்கிறீட் உடைக்கும் உபகரணங்கள் என்பன அவற்றில் அடங்குகின்றன.

பதுளை, மகரகம, அநுராதபுரம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 6 சந்தேக நபர்களும் புதையல் தோண்டும் பல்வேறு சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் ஏழு பேரும் விசாரணைகளின் பின் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்படவுள்ளனர்.

யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் திலீப் என் லியனகேயின் கீழ் உள்ள தலைமை பொலிஸ் இன்ஸ்பெக்டர் நிகால் பிரான்சிஸ் தலைமையிலான மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரே இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

# டிசம்பர் வரை தேவையான அரிசி கையிருப்பில் உண்டு

## அமைச்சர் அமரவீர தகவல்

இந்த ஆண்டு டிசம்பர் மாதம் வரையான காலப்பகுதிக்குப் போதுமான அரிசி தொகை நாட்டில் இருக்கின்றது என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

பற்றாக்குறையாக உள்ள அரிசி தொகை வர்த்தக அமைச்சால் முன்பதிவு செய்யப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று நாடாளுமன்றில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே அமைச்சர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நாட்டின் வருடாந்த அரிசி நுகர்வானது 24 இலட்சம் மெற்றித் தொன்னாக உள் ள நிலையில், வருடாந்த அரிசி உற்பத்தியானது 16 இலட்சம் மெற்றித் தொன்னாகக் காணப்படுகின்றது.

இந்த அறுவடையானது 8 மாத காலப் பகுதிக்குப் போதுமானதாகும். எனவே, நான்கு மாத காலப்பகுதிக்கு அரிசி பற்றாக்குறையாகும் நிலைமை உள்ளது.

இம்முறை சிறுபோகத்தில் திட்டமிடப்பட்ட பயிர் நிலத்திற்கு அதிகமான நிலப் பரப்பில் பயிரிடுவதற்கு விவசாயிகள் முன்வந்துள்ளனர்.

2020ஆம் ஆண்டு சிறுபோகத்தில் 4 இலட்சத்து 43 ஆயிரத்து 362 ஹெக்டேயர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டது. 2021ஆம் ஆண்டு இந்த நிலப்பரப்பின் அளவானது 4 இலட்சத்து 45 ஆயிரம் ஹெக்டேயராகக் காணப்பட்டது.

இந்தநிலையில் இந்த ஆண்டு குறித்த பயிர் நிலத்தின் அளவானது 4 இலட்சத்து 47 ஆயிரம் ஹெக்டேயராக அதிகரித்துள்ளது.

இந்த ஆண்டு முன்னதாக, 2 இலட்சத்து 44 ஆயிரம் ஹெக்டேயர் நிலப்பரப்பில், பயிர் நடவடிக்கை நிறைவுசெய்யப்பட்டிருந்தது.

எனினும், மேற்கொண்ட முயற்சியின் பலனாக, தற்போது 4 இலட்சத்து 47 ஆயிரம் ஹெக்டேயரில் பயிரிடும் பணிகள் இடம்பெறுகின்றன.

மக்கள் தற்போது, அரிசியைக் கொள்னவு செய்து களஞ்சியப்படுத்தப் பார்க்கின்றனர்.

தற்போதைய நிலைமையில், இந்த ஆண்டின் இறுதி சில நாட்களின்போதே அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்படக்கூடும். அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்திற்கே அரிசி தேவையாக உள்ளது.

3 இலட்சத்து 39 ஆயிரம் மெற்றிக் டன் அரிசி கடந்த வாரம் கொள்வனவு செய்யப்பட்டது. இந்தத் தொகையை விடவும், இன்னும் சிறிதளவான அரிசியே அவசியமாக உள்ளது. அதற்கான முன் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றார்.

# சாணக்கியனின் கருத்துக்கு சபையில் பிரதமர் கண்டனம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் கடந்த மே 20ஆம் திகதியன்று நாடாளுமன்றில் வெளியிட்ட கருத்துக்கள் தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமது கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

20ஆவது அரசமைப்பு திருத்தம் உட்பட்ட நாட்டுக்கு எதிரான செயற்பாடுகளுக்கு ஆதரவளித்தமை காரணமாகவே பலரின் வீடுகள் எரியூட்டப்பட்டன என்று சாணக்கியன் எம்.பி. வெளியிட்ட கருத்து ஏற்புடையதல்ல என்று ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

இந்தக்கருத்தின்மூலம், சாணக்கியன், நடந்த வன்முறைகளை ஏற்றுக்கொள்கிறாரா? மரணத்தை ஏற்றுக் கொள்கின்றாரா? என்று ரணில் விக்கிரமசிங்க கேள்வி எழுப்பினார்.

சாணக்கியனின் கருத்தின்படி, 20 ஆவது திருத்தத்துக்கு ஆதரவளித்தமையே வீடுகள் எரியூட்டப்பட்டமைக்குக் காரணமாக இருக்குமானால், குமார வெல்கமவின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பில் அந்தக் கருத்து பொருந்தாது என்று ரணில் குறிப்பிட்டார்.

கோட்டாபய வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்று முதலில் கூறியவரே குமார வெல்கம என்பது அனைவருக்கும் தெரியும் என்றும் ரணில் குறிப்பிட்டார்.

எனவே, அவர் ஏன் தாக்கப்பட்டார் என்று ரணில் கேள்வி எழுப்பினார்.

எனவே, அடுத்த நாடாளுமன்ற அமர்வின்போது சாணக்கியன் தமது கருத்து தொடர்பில் கவலை வெளியிட்டு தமது கருத்தைத் திரும்பப்பெறவேண்டும்.

இல்லையேல், குறித்த கருத்து தொடர்பில் விசாரணை மேற்கொள்ளுமாறு சபாநாயகரிடம் கோர வேண்டியிருக்கும் என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எச்சரித்தார்.

## பஸிலின் இடத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசமினால் தேர்தல்கள் ஆணைக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ நேற்று முன்தினம் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகியமையைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்துக்காக தம்மிக்க பெரேரா தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக நாடாளுமன்றத்திற்கு பிரவேசிக்க உள்ளார்.

## சிசுவின் சடலம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கிடப்பதை அவதானித்து அது தொடர்பாக லிந்துலை பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர். இதனையடுத்து பொலிஸார் அங்கு சென்று உடலத்தை மீட்டுள்ளனர்.

இறந்த சிசு யாருடையது என்பது தொடர்பான தகவல் இதுவரை தெரியவில்லை. சிசுவின் சடலத்தை நுவரெலியா மாவட்ட நீதவான் விசாரணையின் பின்னர் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல உள்ளதாக தெரிவித்த லிந்துலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இந்திய எக்ஸிம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமைச்சின் செயலாளர் எம். சிறிவர்தன நேற்றுக் கைச்சாத்திட்டார்.

இந்த ஒப்பந்தத்தில் இந்திய அரசின் சார்பில் எக்ஸிம் வங்கியின் பொது மேலாளர் நிர்மித் நரேந்திர வெட் கையெழுத்திட்டார்.

சிறு போகத்துக்கான யூரியா உரத்திற்கான உடனடி தேவையை பூர்த்தி செய்வதற்காக 65 ஆயிரம் மெற்றிக் தொன் யூரியா உரத்தை இறக்குமதி செய்வதற்கு இலங்கை அரசாங்கம் இந்திய அரசாங்கத்திடம் கடனுதவி கோரியுள்ளது.

அந்த கோரிக்கையை ஏற்று, இந்தியாவில் இருந்து யூரியா உரத்தை இறக்குமதிசெய்ய55மில்லியன்டொலர்களை( சுமார் இரண்டாயிரம் கோடி ரூபா) கடனாக வழங்க இந்திய அரசு ஒப்புக் கொண்டது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவும் ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கு நாடு கடுமையான தட்டுப்பாட்டைச் சந்தித்து வரும் நிலையில், மக்களின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதே தனது முதன்மையான முன்னுரிமை என்று பிரதமர் தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சம்பிக்கவின் குடும்பி

**தமது தேவைக்கும் – தமது வேலைக்கும் – தமக்கான வேளைக்கும் – ஏற்ப நாக்கைப் புரட்டிப்போட்டுப் பேசக் கூடியவர்கள்தான் அரசியல்வாதிகள். அதில் அதிசயமில்லை.**

**பதவிகளுக்காகவும் தேவைகளுக்காகவும் தங்கள் கொள்கை நிலைப்பாடுகளில் அவர்கள் அடிக்கும் 'பல்டி'களும், குத்துக்கரணங்களும் பல சமயங்களில் ஆச்சரியம் தருவனவாக இருக்கும்.**

**அத்தகைய ஆச்சரியத்தை தந்து நிற்கின்றார் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் 43ஆம் படையணியின் தலைவருமான சம்பிக்க ரணவக்க.**

**'தமிழரைப் புறந் தள்ளியமையால் படுகுழியில் வீழ்ந்துள்ளது நாடு! அவர்களையும் அவரணைத்துப் பயணியுங்கள்; கோட்டா – ரணில் அரசிடம் சம்பிக்க இடித்துரைப்பு' – என்று வெளியாகிய செய்திகளை வாசிக்கும் தமிழர் மத்தியில் – அவர்கள் மனங்களில் – பல்வேறு பழமொழிகள்தான் மனதில் ஓடும் என்பது நிச்சயம்.**

**★ 'சோழியன் குடுமி சும்மா ஆடாது'**

**★ 'சாத்தான் வேதம் ஓதுகின்றது'**

**★ 'ஆடு நனைகிறது என்று ஓநாய் கவலைப்படுகின்றது'**

**★ 'நீலிக் கண்ணீர் வடித்தல்', 'முதலைக் கண்ணீர் வடித்தல்'**

**– இப்படி பல பழமொழி வகையறாக்களுக்குள் அடங்கத் தக்கதாக இருக்கின்றது சம்பிக்க ரணவக்கவின் பேச்சு.**

**அவரின் சரித்திரம் – கடந்த கால செயற்பாடுகள் – அறிந்தவர்கள் அவரின் பேரினவாதத் தடிப்பை – வெறிப்போக்கை – நிச்சயம் அறிந்தவர்களாக இருப்பர்.**

**1988 ஜே.வி.பியின் இரண்டாவது கிளர்ச்சிக் காலத்தில் அதன் மாணவ செயற்பாட்டாளராக இருந்த சம்பிக்க ரணவக்க, பின்னர் தமிழர் விரோதப் போக்குடைய 'ஜனதா மித்ரு' என்ற அமைப்பை அத்துரலிய ரத்ன தேரர் போன்றோரோடு சேர்ந்து உருவாக்கிப் பேரினவாதத்தைக் கக்கியவர்.**

**பின்னர் 'சிஹல உறுமய' என்ற பெருந்தேசிய சிங்களப் பேரினவாதக் கட்சியில் இணைந்த அவர், 'பயங்கரவாதத்துக்கு எதிரான தேசிய இயக்கத்தை' ஸ்தாபித்து பெருத்த எடுப்பில் தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு எதிராக மோசமாகக் செயற்பட்டவர்.**

**'சிஹல உறுமய' கட்சி 'ஜாதிக ஹெல உறுமய' ஆக மாற்றம் பெற்ற போது அதனுடன் சேர்ந்து இயங்கிய அவர், 2015 ஜனாதிபதித் தேர்தல் வரை மஹிந்த ராஜபக்ஷவின் ஆளாகச் செயற்பட்டமையுடன் அந்த அணியில் முழு அளவில் தமிழர் விரோதக் கருத்துக்களைக் கக்கி வந்தவர்.**

**விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில்ல போன்றோருக்கு நிகரான பௌத்த, சிங்களப் பேரினவாதியாகத் தம்மை எப்போதும் அடையாளப்படுத்தி, வெளிப்படுத்தி, செயற்பட்டு வந்தவர்.**

**2015 இதற்குப் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி பக்கம் பாய்ந்தாராயினும் சிறுபான்மை இனத்தவர்களுக்கு எதிரான அவரது பண்பியல்புகளில் மாற்றம் இருக்கவேயில்லை.**

**இப்போது அவருக்கு ஜனாதிபதிப் பதவி ஆசை வந்துவிட்டது. சஜித் பிரேமதாஸாவுடன் ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்தால் அந்த வாய்ப்புக் கிடைக்காது எனக் கருதி, ஓர் எம்.பியாவதற்கு அக்கட்சியைப் பன்படுத்திவிட்டு, இப்போது சுயாதீனமாகச் செயற்படுகின்றார் என்று கதை விட்டபடி காய் நகர்த்துகின்றார்.**

**இரு தரப்பு, முத்தரப்பு அல்லது நான்கு தரப்புப் போட்டியாக இனி வரக் கூடிய ஜனாதிபதி தேர்தல் அமையும் என்பதால் அதில், சிறுபான்மையினரின் வாக்குகள் கணிசமான தாக்கத்தைச் செலுத்தும் என்பது தெளிவு. அதனால்தான் இப்போது புதிதாகத் தமிழர்கள் குறித்து நீலிக் கண்ணீர் வடிக்கத் தொடங்கியிருக்கின்றார் அவர். சம்பிக்க என்ற சோழியனின் குடுமி சும்மா ஆடவில்லை என்பது தமிழர்களுக்கு நன்கு தெரியும்.**

# பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க பிரதேச சபைகளைக் கலைக்குக

## தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி உறுப்பினர் வேண்டுகோள்



ஏறாவூர்பற்று - செங்கலடி பிரதேச சபையை கலைத்து அல்லது ஒத்தி வைத்து இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு எம்மாலான ஒத்துழைப்பை வழங்குவோம் என தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் செங்கலடி பிரதேச சபை உறுப்பினர் ந. திருநாவுக்கரசு (அருன்) தெரிவித்துள்ளார்.

செங்கலடி பிரதேச சபையில் இடம்பெற்ற மாதாந்த பொது அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் உறுப்பினர் ந.திருநாவுக்கரசு தெரிவிக்கையில் –

கடந்த 2018ஆம் ஆண்டு உள்ளூராட்சி தேர்தலின் பின் 8 ஆயிரத்து 356 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். அவர்களுக்கு மாதாந்தம் 15 ஆயிரம் ரூபா சம்பளம் படி பார்த்தாலும் அண்ணளவாக 15 கோடி ரூபாவுக்கு மேல் இந்த இலங்கை அரசாங்கம் இவர்களுக்கு வழங்குகிறது. இதற்கு மேலாக தவிசாளர்களுக்கு தொலைபேசி கொடுப்பனவு, எரிபொருள் செலவு என ஒரு பக்கம், எனது நாட்டில் சில பிரதேச சபைகள் தமது சபைகளைக் கலைத்து இந்தப் பொருளாதார நெருக்கடிக்கு தங்களால் இயன்ற ஒத்துழைப்பை வழங்கியுள்ளன,

ஏறாவூர் பற்று செங்கலடி தவிசாளர் நீங்கள் நினைத்தால் இந்த செங்கலடி பிரதேச சபையைக் கலைத்து அல்லது ஒத்திவைத்து இந்த பொருளாதார நெருக்கடிக்கு எம்மால் இயன்ற உதவியை செய்ய முடியும்.

இவ்வாறான திட்டங்களை இந்த பிரதேச சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தவிசாளராக உள்ள நீங்கள் கொண்டுவரும் பட்சத்தில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி எங்களது பூரண ஆதரவை வழங்கும் எனவும் தெரிவித்தார்.

அதற்கு பதிலளித்த தவிசாளர் சி.சர்வானந்தன், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி உறுப்பினரின் கருத்துப்படி மட்டக்களப்பு மாவட்டத்திலே தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் ஆளுகைக்குக் கீழுள்ள தங்களது சபைகளை கலைக்குமானால் நாம் எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்சியுடன் கலந்து பேசி அதன் பின் ஏறாவூர்பற்று பிரதேச சபையை கலைப்பதாக முடிவெடுப்போம். – என்றார்.

இதன் போது கருத்து தெரிவித்த உறுப்பினர் திருநாவுக்கரசு, எனது கருத்தை தவிசாளர், பிழையாக விளங்கியுள்ளார்.

நான் எமது சபையை மாத்திரம் கலைக்க கூறவில்லைஒட்டுமொத்தஇலங்கையிலுள்ள 341 பிரதேச சபைகளையும் கலைக்க கோரினேன். இப்படி கலைத்தால் நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு ஓரளவு தீர்வு கிடைக்கும். – என்றார்.

# பொதுமக்களைக் கவரும் வகையில் இனி பொதுப் போக்குவரத்து ஏற்பாடு



பயணிகளை கவரும் வகையில் மிகவும் ஒழுங்கான மற்றும் தரமான பொதுபோக்குவரத்து சேவையை பேணுவதற்குப் பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி மாளிகையில் வியாழக்கிழமை இடம்பெற்ற போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இதற்கான பணிப்புரைகளை வழங்கினார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஊடாக தனியார் பஸ்களுக்கான எரிபொருளை இரவு வேளைகளில் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பார்க் அன்ட் டிரைவ் அமைப்பை விஸ்தரிப்பதற்கும் பார்க்கிங் கட்டணங்களைக் குறைப்பதற்கும் தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

தெரிவு செய்யப்பட்ட ரயில் நிலையங்களுக்கு அருகில் வாகனத் தரிப்பிட வசதிகளை ஏற்படுத்துவது தொடர்பாக ஆராயுமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

அலுவலக சேவைகளை இலக்காக கொண்டு புதிய ரயில் சேவைகளை ஆரம்பிக்கவும், தற்போதுள்ள ரயில்களுக்கான பெட்டிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# சைக்கிள் திருட்டு தொடர்பில் மக்கள் அவதானம் தேவை!

## பொலிஸார் அறிவிப்பு

அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் அண்மைக் காலமாக சைக்கிள்கள் திருடப்படுகின்றன என முறைப்பாடுகள் சில கிடைக்கப் பெற்றமையைத் தொடர்ந்து பெரிய நீலாவணை பொலிஸார் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.

இதன் போது சந்தேகத்தின் பேரில் ஆண், பெண், சந்தேக நபர்கள் பலர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இந்நிலையில் பிரதான சந்தேக நபர் தலைமைமறைவாகி உள்ள நிலையில் பாண்டிருப்பு மற்றும் துறைநீலாவணை பகுதிகளில் களவாடப்பட்ட சைக்கிள்கள் பல விற்பனைசெய்யப்பட்டுள்ளனஎனபொலிஸாரின் விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

எனவே திருடப்பட்ட சைக்கிள்களைக் கொள்வனவு செய்து உடைமையில் வைத்திருப்பவர்கள் உடனடியாகப் பொலிஸாரை அணுகி ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளதுடன் இனிவரும் காலங்களில் தத்தமது உடைமை தொடர்பாக அவதானம் செலுத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த மாதம் பெரியநீலாவணைக்குட்பட்ட பொலிஸ் பிரிவுகளான மருதமுனை, பெரிய நீலாவணை ,பாண்டிருப்பு, உள்ளிட்ட பகுதிகளில் பாடசாலை மாணவர்கள் பொதுமக்களின் சைக்கிள்கள் பல களவாடப்பட்டிருந்த நிலையில் மேற்படி சம்பவம் தொடர்பில் பெரியநீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர். ஜீ.துசார திலங்க ஜெயலால் வழிநடத்தலில் பெருங்குற்றப்பிரிவு பொறுப்பதிகாரியும் உப பொலிஸ் பரிசோதகருமான டி.டினேஸ் தலைமையிலான குற்றத் தடுப்பு பிரிவினர் சம்பவத்துடன் தொடர்புடையவர்களைத் தேடிக் கைது செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தமிழர் காணி சுவீகரிப்பை அரசு நிறுத்தினால் தற்போதைய பிரச்சினைக்குத் தீர்வு காணலாம்!

## சித்தார்த்தன் எம்.பி. ஆலோசனை



வடக்கில் காற்றாலை மின் உற்பத்தியால் கிடைக்கின்ற இலாபத்தில் கட்டாயமாக ஒரு பகுதியை அந்த பகுதியில் உள்ள அபிவிருத்திக்கு ஒதுக்க வேண்டும் என யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் –

மின்சாரம் நாட்டில் மிகப்பெரிய பிரச்சினையாக உள்ளது. மின்சாரம் அடிக்கடி தடைப்படுவதால் மக்கள் அல்லல்படுகின்றனர். எங்களைப் பொறுத்தமட்டில் டொலர் தட்டுப்பாடும் பொருளாதாரப் பின்னடைவும் இருக்கின்ற போது டொலரை கொடுத்து வாங்கக்கூடிய எரிபொருள் மூலம் நடத்தப்படுகின்ற மின் உற்பத்தி நிலையங்களை நம்பியிருக்காமல் இயற்கை வளத்தால் கிடைக்கக் கூடிய மின் உற்பத்தியை அதிகரிப்பதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும்.

மன்னார் தொடக்கம் காங்கேசன்துறை வரை காற்றாலை மின் உற்பத்தி நிலையங்களை உருவாக்குவதற்கு மிகப் பொருத்தமான இடமாக விளங்குவதாகக் கூறப்படுவதுடன் அந்தப் பகுதிகளில் மின் உற்பத்தி நிலையங்கள் உருவாக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மின்சாரம் எவ்வளவு முக்கியம் என்பது தான் நாங்கள் பார்க்க வேண்டிய விட யம்.

காற்றாலை மற்றும் சூரிய ஒளியால் உருவாக்கப்படும் மின்சக்தி நிலையங்களை புதுப்பிக்கத்தக்க சக்தி மூலம் உருவாக்கப்படும் மின்சக்தி நிலையங்களாக உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வடக்கிலே காற்றாலை மின்சாரம் உருவாக்குவதற்கான முயற்சிகள் நடக்கிறபோது ஒரு விடயத்தை நாம் பார்க்க வேண்டும். இது ஒருவித பாதிப்பை ஏற்படுத்துமென மக்கள் மத்தியில் ஒரு பயம் உள்ளது. மின் உற்பத்தியால் கிடைக்கின்ற இலாபத்தில் கட்டாயமாக ஒரு பகுதியை அந்த பகுதியில் உள்ள அபிவிருத்திக்கு ஒதுக்க வேண்டும். இது பல இடங்களில் இடம்பெறுகின்றது. தனியார் நிறுவனங்களோ, வெளிநாட்டு நிறுவனங்களோ, அதானி குழுமமாகவோ இருக்கலாம் யாராக இருந்தாலும் கிடைக்கும் இலாபத்தில் ஒரு பகுதியை கட்டாயமாக அந்த பகுதிக்கான அபிவிருத்தியில் ஒதுக்குவதற்கு முன்வர வேண்டும். இதனை ஒப்பந்தத்திலும் சேர்க்கவேண்டும்.

இந்தியாவைப் பொறுத்தவரை பல நெருக்கடியான சமயத்தில் இலங்கைக்கு உதவி செய்து வருகின்றது. நிச்சயமாக அதற்காக இந்தியப் பிரதமர் மோடிக்கும் தமிழக முதல்வருக்கும் நன்றி தெரிவிக்க வேண்டும். தமிழகத்தில் அதிகளவு உணவுப் பொருள்களைச் சேகரித்து தற்போது அவை நாடு முழுவதும் கொடுக்கப்படுகின்றது. முதலில் வடக்கு, கிழக்கு, மலையக பகுதிகளுக்கே இந்த உதவிகளை வழங்கத் திட்டமிட்டிருந்தார்கள். ஆனால் அதில் உள்ள குறையை நாம் சுட்டிக்காட்டிய பின்னர் முழு நாட்டுக்கும் வழங்க அவர்கள் தீர்மானித்தார்கள்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பேசுகின்ற போது இந்த நாட்டை கட்டி எழுப்புவதற்கான முயற்சியில் முழு நாடும் பங்குதாரர்களாக இருக்க வேண்டும் என்று தெரிவித்தார். எங்களுடைய பகுதியில் அத்துமீறி செய்கின்ற விடயங்களை அரசு உடனடியாக நிறுத்த வேண்டும். முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில் உள்ள காணியைப் பலவந்தமாக எடுப்பதற்கு கோட்டாபய கடற்படை முகாமில் இருந்து முயற்சிகள் எடுக்கப்பட்டு அது மக்கள் போராட்டத்தால் பின்னுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. அதேபோல யாழ்ப்பாணத்தில் ஊர்காவற்றுறையில் காணி எடுப்பதற்கான முஸ்தீபுகள் காணப்படுகின்றன.

இவர்கள் இவ்வாறெல்லாம் செய்து கொண்டிருக்கின்ற போது எப்படி நாங்கள் முழுமையான மனதுடன் இந்தப் பொருளாதார சிக்கலைத் தீர்க்க உதவமுடியும்.

புலம்பெயர் தமிழர்கள் இங்குள்ள பொருளாதார நெருக்கடிக்கு உதவ வேண்டும் என்ற கோரிக்கை மிகப்பெரிய அளவில் முன்வைக்கப்படுகின்றது. ஜனாதிபதியுடனான சர்வகட்சி மாநாட்டிலும் இது பற்றி பேசப்பட்டது. அப்போதும் நாம் கூறியமை ஆகக்குறைந்தது இவ்வாறான அத்துமீறல்களையாவது தமிழர் பகுதியில் தடுக்க வேண்டுமென்றோம். அப்போது அது பற்றி தனக்கு தெரியாதென ஜனாதிபதி கையைவிரித்தார். அவர் கூறிய பின்பும் இவ்வாறான விடயங்கள் இடம்பெற்றன. ஆகவே இவ்வாறான விடயங்களை நிறுத்தினால் நாட்டிலுள்ள பொருளாதாரப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண முடியும். இதை அரசாங்கம் செய்ய வேண்டும். – என்றார்.

# மக்கள் வீணாக அச்சமடையத் தேவையில்லையாம் மாற்றுமருந்துகள் கையிருப்பில் உள்ளனவாம்

## சுகாதாரப் பிரிவு அறிவிப்பு

நாட்டில் அத்தியாவசிய மருந்து வகைகளின் கையிருப்பு குறைவாக காணப்படுகின்ற போதிலும், அவற்றுக்கான மாற்று மருந்துகளின் கையிருப்பு போதியளவு உள்ளது.

எனவே அது தொடர்பாகப் பொது மக்கள் வீணாக அச்சமடையவோ குழப்பமடையவோ தேவையில்லை என சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது

மருத்துவரின் ஆலோசனைகளைப் பெறாமல் அத்தியாவசிய மருந்துகளை மருந்தகங்களில் கொள்வனவு செய்வதைத் தவிர்க்குமாறும், கொழும்புக்கு வெளியே உள்ளவர்கள் கொழும்புக்கு வருவதைத் தவிர்த்து தத்தமது பிரதேசங்களுக்கு அண்மையில் உள்ள வைத்தியசாலைகளுக்கு செல்லும்படியும் சுகாதாரப் பிரிவு பொது மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.

இதேவேளை அரச வைத்தியசாலைகளில் மருந்துக்குத் தட்டுப்பாடு நிலவுகின்ற காரணத்தால் மருந்தகங்களில் கூடிய காலத்துக்கு மருந்துகளைக் கொள்வனவு செய்வதைத் தவிர்த்துக்கொள்வது நல்லது.

மருந்துகளைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்வதற்கு சரியான வெப்பநிலை தேவை என்பதுடன், எதிர்காலத்தில் உங்களுக்கான மருந்துகள் மாறவும் கூடும். ஆகவே, மருந்துகளை அளவுக்கதிகமாக எடுத்துக் கொள்ள வேண்டாம்.

மேலும், நோயாளர்கள் தங்களது மாதாந்த சிகிச்சைகளுக்கு வருவதை நிறுத்தாமல் – தவறாது வருகை தரும்படியும், வைத்தியர்களின் ஆலோசனைகளுக்கு அமைவாக மருந்துகளைப் பெற்றுக்கொள்ளும்படியும் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் உபுல் திஸாநாயக்க பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

அவர் மேலும் கூறுகையில் –

உண்மையில், உயிராபத்தை ஏற்படுத்தக்கூடிய நோய்களுக்கான சத்திர சிகிச்சைகளைக் குறித்த திகதிகளில் நடத்துவதை நாம் பிற்போட மாட்டோம். எனினும், சாதாரண நோய்களுக்கான சத்திர சிகிச்சைகள் பிறிதொரு தினத்தில் நடத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

புற்றுநோய், மாரடைப்பு, பக்கவாதம் போன்ற நோய்களுக்கான சிகிச்சைகளுக்கு முன்னுரிமை அளிப்பது கட்டாயமாகும். அத்துடன் நீரிழிவு, கொலஸ்ரோல், இரத்த அழுத்த நோய்களை உடையவர்கள் கட்டாயமாக பரிசோதனை செய்து கொள்வது சிறந்தது.

மேலும், அதற்கான மருந்துகளைத் தவறாது உட்கொள்வதன் மூலம் பாரிய நோய்த் தாக்கத்திலிருந்து தப்ப முடியும். மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டாலும், அவற்றுக்கான மாற்று மருந்துகள் எம்மிடம் உள்ளன.

மேலும், மருத்துவர்களின் ஆலோசனைகளைப் பெறாமல் எந்தவொரு மருந்தையும் எடுப்பதைக் கட்டாயம் தவிர்க்கும்படி நரம்பியல் சம்பந்தமான விசேட வைத்திய நிபுணர் தர்ஷண சிறிசேன தெரிவித்தார்.

இதேவேளை, கொழும்பு தேசிய வைத்தியசாலைகளில் மாதாந்தக் கிளினிக்குகளுக்கு வருகை தரும் வெளிமாவட்ட நோயாளர்கள் தத்தமது பிரதேசங்களுக்கு அருகிலுள்ள வைத்தியசாலைகளில் மருத்துவ ஆலோசனைகளையும் மருந்துகளையும் பெற்றுக் கொள்ளுங்கள். மக்களின் வரிப்பணத்தைக் கொண்டு இலவசக் கல்வியை பெற்ற நாம் மக்களுக்கு உதவி செய்வதில் ஒருபோதும் பின்னிற்பதில்லை.

சிறுவர்களுக்கான திரவ மருந்துகள் (சிரப்) தட்டுப்பாடு காணப்படுகிறது. சிறுவர்களது நோய்களை குணப்படுத்தும் மருந்து வில்லைகளைத் தூளாக்கி அவர்களுக்கு பருகக் கொடுங்கள். பெற்றோர்கள் அச்சமடையத் தேவையில்லை.

அவற்றில் எந்தவித பிரச்சினையும் இல்லை. நாட்டில் அத்தியாவசிய மருந்து வகைகளின் கையிருப்பு குறைவாகக் காணப்படுகின்ற போதிலும், அவற்றுக்கான மாற்று மருந்துகளின் கையிருப்பு போதியளவு உள்ளது. ஆகவே, பொது மக்கள் வீணாக அச்சமடையவோ குழப்பமடையவோ தேவையில்லை என இலங்கை வைத்தியர்கள் சங்கத்தின் உப தலைவரும் விசேட வைத்திய நிபுணருமான சுரந்த பெரேரா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள சுகாதார அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இது சிரிக்கின்ற விடயம் அல்லவே: நாட்டின் எதிர்காலம் பாழாகிவிட்டது!

## பஸில் குறித்து சனத் ஜயசூரிய காட்டம்



முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் விசேட செய்தியாளர் சந்திப்பு தொடர்பாக இலங்கையின் முன்னாள் கிரிக்கெட் வீரர் சனத் ஜயசூரிய கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் வியாழக்கிழமை இடம்பெற்ற விசேட ஊடக சந்திப்பில் உரையாற்றிய பஸில் ராஜபக்ஷ, நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகத் தீர்மானித்துள்ளார் என அறிவித்தார்.

மேலும் இதன்போது, அரசமைப்பின் உத்தேச 21 ஆவது திருத்தம், தற்போதைய பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட செய்தியாளர்கள் எழுப்பிய பல கேள்விகளுக்கு அவர் பதிலளித்தார்.

இந்நிலையில், இந்த ஊடக சந்திப்பு தொடர்பாக டுவிட்டரில் பதிவிட்டுள்ள இலங்கையின் முன்னாள் கிரிக்கெட் வீரர் சனத் ஜயசூரிய, இந்த ஊடக சந்திப்பு தொடர்பில் தான் அதிருப்தியடைந்துள்ளேன் எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பால் நான் மிகவும் ஏமாற்றமடைந்துள்ளேன். இது சிரிக்கும் விடயம் அல்ல. எங்கள் நாட்டின் எதிர்காலம் பாழாகிவிட்டது. நீங்கள் பொறுப்பேற்கவில்லை. இந்த அரசியல் நாடகங்களை நிறுத்துங்கள் – எனப் பதிவிட்டுள்ளார்.

# வடக்கில் உள்ள பொதுமக்களின் நிலங்களை அரசாங்கம் உடனடியாக கையளிக்க வேண்டும்!

## கலாநிதி ஆறு.திருமுருகன் வலியுறுத்து



இலங்கைத் திருநாடு இன்று சீரழிந்து வாழும் வழி தெரியாது தவிக்கிறது. அறங்களைப் பேணாத காரணத்தாலும் பொருளாதார வளங்களை அறிவுரீதியில் திட்டமிடாத காரணத்தாலும் இன்று இந்நாடு கையேந்தித் தவிக்கின்றமை துக்கமாகவும் வெக்கமாகவும் உள்ளது. அறம் பிழைக்கின்ற போதெல்லாம் நாடு அழிவை நோக்கும் என்பதை அற நூல்கள் நன்கு எடுத்துரைக்கின்றன. இனிமேலாவது ஆட்சிஅதிகாரத்தில்உள்ளவர்கள் எல்லோரையும் சமமாகக் கருதிச் செயற்பட வேண்டும்.

– இவ்வாறு ஊடக அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவரும் சிவபூமி அறக்கட்டளை நிறுவனத் தலைவரும், அகில இலங்கை இந்துமாமன்றத்தின் உப தலைவருமாகிய கலாநிதி ஆறு. திருமுருகன்.

அவரது ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

இன்றைய இக்கட்டான நிலையில் வடக்கு, கிழக்கு மாகாண மக்கள் சார்பில் அரசாங்கத்திடம் நாம் விடுக்கும் வேண்டுதல் என்னவென்றால், போர்க்காலத்தில் தமிழர்களின் பயன்தரு நிலங்கள் பல இராணுவத் தேவைக்காக பறிக்கப்பட்டன. அவற்றை இன்றைய சூழலிலாவது கையளியுங்கள். சிறந்த விவசாய பூமியாகிய வலி.வடக்குப் பகுதியில் குரும்பசிட்டி, கட்டுவன், பலாலி, மயிலிட்டி, காங்கேசன்துறை பகுதிகளில் பல பொதுமக்களின் நிலங்களும் சமய சமூக நிறுவனங்களின் நிலங்களும் இராணுவம் கையளிக்காமல் வைத்துள்ளது.

போர் முடிந்து இத்தனை வருடமாகியும் பல பயன்தரும் செம்மண் நிலங்கள் கையளிக்கப்படாமல் உள்ளன. பஞ்சம், பசி, பட்டினியை நோக்கியுள்ள இவ் வேளையிலாவது இந்நிலத்தை மக்களிடம் கையளியுங்கள்.

கிளிநொச்சி மாவட்டத்தில் குறிப்பாக இயக்கச்சியில் எத்தனையோ பொதுமக்களின் தென்னந்தோட்டங்கள், வயல்கள் இராணுவத்தின் கைகளில் உள்ளன. தருவார்கள் தருவார்கள் என்று காணி உறுதிகளோடு மக்கள் அலைந்து கொண்டு இருக்கிறார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்திலும் மன்னார் மாவட்டத்திலும் பயன்தரு நிலங்கள் பலவற்றில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

நிலச் சொந்தக்காரர்கள் விடும் கண்ணீர் நாட்டை ஆள்பவர்களுக்கு சாபமாகிக் கொண்டிருக்கின்றது. எனவே, உடனடியாக அரசாங்கமும் இராணுவ உயர் அதிகாரிகளும் நாட்டின் நன்மை கருதி பொதுமக்களின் நிலங்களை உரியவர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

இதை விடுத்து நாம் நாட்டை முன்னேற்ற முடியாது. பொதுமக்களின் நிலங்களைக் கையளிக்க வேண்டும் என்பதை சிங்கள மக்களும் இவ்வேளையில் ஓங்கி குரல்கொடுக்க வேண்டும் என தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# இறக்குமதியாகும் அத்தியாவசிய பொருள்களை தாமதமின்றி விடுவிக்க நடவடிக்கை எடுக்குக!

## ஜனாதிபதி உத்தரவு

நவீன தொழில்நுட்பத்தினூடாக வினைத்திறன்மிக்க சேவையை வழங்கி இலங்கை துறைமுகத்தில் சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையைப் பெற வேண்டுமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலைமையைக் கருத்திற் கொண்டு இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசியப் பொருள்களைத் தாமதமின்றி விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சின் முன்னேற்ற மீளாய்வு தொடர்பான கலந்துரையாடல்வியாழக்கிழமை முற்பகல் கோட்டை ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றபோதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். இதன்போது மேலும் தெரிவித்த அவர் –

கொழும்பு துறைமுகம் உலகின் அனைத்து முன்னணி கப்பல் நிறுவனங்களுடனும் இயங்குகிறது. நிர்வாக சபை உட்பட முழு ஊழியர்களும் பொறுப்புடன் செயற்பட்டு அதனைப் பாதுகாக்க வேண்டும்.



சட்டத்தை மீறி இறக்குமதி செய்வதால் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பொருள்களை ஏலம் விடுவதில் முறைகேடுகள் நடக்கின்றன எனத் தெரியவந்துள்ளது. கட்டடப் பொருள்கள் கூட்டுத்தாபனம் போன்ற அரச நிறுவனங்களால் இவ்வாறான பொருள்களை விற்பனைசெய்வதில்இடம்பெறும் ஊழல்களை தடுத்து அரசாங்கத்துக்கு வருமானத்தை ஈட்ட முடியும். தற்போதைய நிலைமையை கருத்திற் கொண்டு இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசிய பொருள்களை தாமதமின்றி விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். – எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

# 80 வீதத்துக்கும் அதிகமான இலங்கையர் மலிவான உணவையே உட்கொள்கின்றனர்!

## ஐக்கிய நாடுகள் சபை தகவல்

இலங்கையில் உள்ள குடும்பங்களில் 80 வீதத்திற்கும் அதிகமானோர் குறைந்த அல்லது மலிவான உணவை உண்கின்றனர் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

உலக உணவுத் திட்டத்தின் மாதாந்த அறிக்கையில் இது ஊட்டச்சத்து குறைபாட்டின் அபாயத்தை உயர்த்தியுள்ளதைக் காட்டுவதாக அந்த சபை மேலும் கூறியுள்ளது.

தொடர்ச்சியாக இரண்டு பருவங்களில் இருந்து நெல் அறுவடை குறைவதால் உணவுப் பாதுகாப்பின்மை அதிகரிக்கும் என்று அந்த அறிக்கை கூறுகிறது.

இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் விலை 20 வீதமாக அதிகரித்துள்ளதாகவும் வழங்கல் பற்றாக்குறை மற்றும் அதிக உற்பத்திச் செலவு காரணமாக உள்ளூர் அரிசி வகைகளின் விலை 6 வீதம் அதிகரித்துள்ளதாகவும் ஐ.நா. சபை மேலும் தெரிவித்துள்ளது.

# தொழிற்சங்க நடவடிக்கை; நீர் மின் உற்பத்தி பாதிப்பு!

நுரைச்சோலை அனல் மின்நிலையத்தின் முழுமையான பங்களிப்பு தேசிய மின்கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக நீர்மின் உற்பத்தி சிலவற்றின் தொழிற்பாடுகள் செயலிழந்துள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

லக்ஷபான, நவலக்ஷபான, பொல்பிட்டிய, விமலசுரேந்திர மற்றும் கெனியோன் ஆகிய 5 நீர்மின் நிலையங்களின் மின் உற்பத்தி நடவடிக்கைகளே இவ்வாறு தற்காலிகமாக செயலிழந்துள்ளன.

இதன்காரணமாக மேற்படி நீர்மின் உற்பத்தி நிலையங்களில் இருந்து கிடைக்கப் பெறும் 300 மெகாவாட் மின்சாரம் தேசிய மின்கட்டமைப்பிற்கு கிடைக்காது போகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கரித்தாஸ் கியுடெக்கினால் பொது மண்டபம் அமைப்பு






யாழ்.மூர் வீதியில் உள்ள ஜே-86 கிராமசேவகர் பிரிவில் பொதுமக்கள்ஒன்றுகூடலுக்கான பொதுமண்டபம் இன்மையால் பல சிரமங்களை எதிர்கொண்ட மக்களுக்கு கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தின் நிதி உதவுயுடன் ஒன்றிணைந்த மனித மேம்பாட்டு செயற்திட்டத்தின் கீழ் பொதுமண்டபம் அமைத்து மக்கள் பாவனைக்காகவும் சிறு குழுக்களின் ஒன்றுகூடல் பயிற்சிக்காகவும் கியூடெக் கரித்தாஸ் இயக்குநர் அருட்பணி ச.இயூஜின் பிரான்ஸிஸ் அடிகளாரால் கடந்த செவ்வாய்க்கிழமை திறந்து கையளிக்கப்பட்டது.

'கம்பவாரிதி' இலங்கை ஜெயராஜ் தமது 'உகரம்' இணையத்தளத்தில் 'பாட்டும் நானே! பாவமும் நானே!' என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி - பதில் பகுதி 'காலைக்கதிர்' நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்குத் தீனியாகிறது.

# பாட்டும் நானே? பாவமும் நானே!




**1. கேள்வி:-** ரஷ்ய, உக்ரேன் போரில் யார் தோற்கிறார்கள்? யார் வெல்கிறார்கள்?

**பதில்:-** உங்கள் கேள்வியிலேயே பிழை இருக்கிறது. தற்போது நடந்து கொண்டிருப்பது ரஷ்யாவுக்கும், உக்ரேனுக்கும் இடையிலான போரல்ல. உக்ரேனை முன்வைத்து அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள் ரஷ்யாவோடு பலப்பரீட்சை நடத்திக் கொண்டிருக்கின்றன என்பதுதான் உண்மை. நடந்து கொண்டிருக்கும் இந்தப் போர், மூன்றாம் உலகப் போருக்கான ஒத்திகை என்று இராணுவ ஆய்வாளர்களால் சொல்லப்படுகிறது. நேற்று வந்த செய்தியின்படி மறுபுறத்தில் ஆஸ்திரேலியாவுக்கும், சீனாவுக்கும் இடையிலும் முறுகல் நிலை தோன்றியிருப்பதாய்த் தெரிகிறது. இவையெல்லாம் எங்கு போய் முடியப் போகிறதோ தெரியவில்லை? பலம் பொருந்திய நாடுகளெல்லாம் அறத்தினை மறந்து அதிக நாளாகிவிட்டது. தத்தமது வெற்றிக்காக அந்நாடுகள் பாவத்தின் சிகரம் நோக்கி நடந்து கொண்டிருக்கின்றன. பாவத்திற்குப் பரிசு மரணம்தான் என்பார்கள். பெரும் மரம் சாய்கையில் வேரோடு, வேரடி மண்ணும் கிளம்புவதுமாப்போல இவர்களின் இழுபறியில் எங்களைப் போன்ற ஏழை நாட்டு மக்களும் பாதிக்கப்படப் போகிறார்கள். கடவுள்தான் நம்மைக் காக்கவேண்டும்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * ஓகோ! இப்ப இருக்கிற கரைச்சலைவிட இப்படியும் ஒரு கரைச்சல் வரப்போகுதோ. இதைச் சமாளிக்க ஜனாதிபதி வேறு எவரையும் பிரதமராய்க் கொண்டுவருவாரோ?**

**2. கேள்வி:-** இந்தியாவில் பாரதீய ஜனதாக் கட்சியின் செய்தித் தொடர்பாளர்கள் இருவர், இஸ்லாமிய மதத்தை இழிவு செய்ததாய்க் கூறி அரபு நாடுகள் போர்க்கொடி தூக்கியிருப்பதையும், இந்திய அரசு அதற்குப் பயந்து, பணிந்து போனதையும் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:-** பலராலும் பின்பற்றப்படுகிற ஒரு மதத்தை இழிவு செய்யும் உரிமை எவருக்கும் இல்லை. அப்படி ஒரு மதத்தை எவர் இழிவு செய்தாலும் அது கண்டிக்கப்பட வேண்டிய விடயம் என்பதில் மாற்றுக் கருத்திற்கு இடமில்லை. பாரதீய ஜனதாக்கட்சி அரசு, அக் கருத்தைக் கூறிய இருவரையும் உடனடியாகத் தனது கட்சியிலிருந்தும் நீக்கியிருக்கிறது. அது பாராட்டப்பட வேண்டிய விடயம். இந்த விடயத்தில் அரபு நாடுகளின் எதிர்ப்புக் குரலுக்கு பணிந்து போன பாரதத்தின் அச் செயல், இந்தியாவின் நாகரிகத்திற்கான எடுத்துக் காட்டு. அதனை இந்தியா அடிபணிந்து போனதாய்ச் சொல்வது தவறு.

ஒரு தலைவன், பிழை ஒன்று நடந்துவிட்டதாய்த் தெரிந்தால், உடனடியாக அப் பிழையைச் சீர்செய்வதில் மானம் பார்க்கக் கூடாது என்கிறார் தெய்வப்புலவர் திருவள்ளுவர். அதனால் நடந்தது பிழை என்று தெரிந்ததும் இந்தியா பணிந்து போனது மிகமிகச் சரியான ஒன்றே. ஒரு கட்சியின் தனிப்பட்ட ஓரிருவரின் கருத்தை இந்தியாவின் கருத்தாகக் கொள்ளக்கூடாது எனும் நாகரிகத்தை அரபு நாடுகளும் உணர்ந்து நடப்பார்கள் என நினைக்கிறேன்.

இந்த இடத்தில் இன்னொன்றையும் சொல்ல மனம் விரும்புகிறது. அண்மையில் தமிழ்நாட்டில் சிதம்பரம் நடராஜப் பெருமானின் நடனத்தைப் பற்றி, பெண்களும் பிள்ளைகளும் கேட்க முடியாத அளவுக்கு மிகக் கொச்சைத்தனமாய் ஒருவர் ஆற்றிய உரை YouTube மூலமாக வெளியானது. அதனைக் கேட்கவே காது கூசியது. சிதம்பரத்தில் ஐயாயிரம் பேருக்கு மேற்பட்டோர் ஒன்றுகூடி அந்த நபருடைய உரைக்கு எதிர்ப்புத் தெரிவித்தமையையும் YouTube இல் பார்க்க முடிந்தது. ஆனால் இன்றுவரை தமிழ்நாடு அரசு அந்த நபரின்மேல் எந்தவித நடவடிக்கையும் எடுத்ததாய்த் தெரியவில்லை.

இதுதான் இன்றைய தமிழ்நாட்டு அரசின் நாகரிகமாக இருக்கிறது. பேசிய அந்த நபரை ஒருதரம் அரபு நாடுகளுக்கு அனுப்பி, அங்கு மத எதிர்ப்புப் பிரச்சாரத்தை செய்து பார்க்கச் சொல்ல வேண்டும். அப்போது தெரியும் அவரது வீரம். இந்துமதத்தின் சகிப்புத் தன்மையை, முட்டாள்கள் அதன் பலவீனமாய்க் கருதித் துள்ளுகிறார்கள். இயற்கையின் ஊடாக இறைவனின் பதில் வருகிறபொழுதுதான் அவர்கள் இந்துமதத்தின் பலத்தினை அறிவார்கள்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * கடவுளர்களுக்கே கஷ்டகாலம் போல! ஹி..ஹி..**

**3. கேள்வி:-** கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நாடாளுமன்றத்தில் ஆற்றுகிற உரைகளை, உலகம் எங்ஙணும் இருந்தும் பலபேர் புகழுகிறார்கள். அது பற்றி நீங்கள் இதுவரை ஏதும் வாய் திறக்காதது ஏன்?

**பதில்:-** உண்மையில் அவர் ஆற்றும் நாடாளு



மன்ற உரைகள் மிகச் சிறப்பானவைகள்தான் என்பதில் ஐயத்திற்கு இடமில்லை. பாரம்பரியத்தாலும் ஒருவருக்குப் பலம் உண்டாகும் என்று நம்புகிறவன் நான். அதனால் கஜேந்திரகுமாருடைய வீரியமிக்க உரைகளைக் கேட்டு நான் வியப்படைவதில்லை. மூன்று தலைமுறைகளாக ஈழத்தமிழர்களின் அரசியலில் ஈடுபட்டு வரும் குடும்பப் பாரம்பரியம் உள்ளவர் அவர். அவரிடம் இந்த ஆற்றல் இல்லாமல்விட்டால்த்தான் நாம் ஆச்சரியப்படவேண்டும். இன்று தனது ஆழம் மிகுந்த உரைகளால் நாடாளுமன்றத்திற்குள் இருக்கும் பேரினப் பிரதிநிதிகளாலும் மதிக்கப்படும் ஒருவராய் அவர் மாறியிருப்பது அவருக்கு மட்டுமல்ல நம் தமிழினத்திற்கும் பெருமை சேர்க்கும் விடயம் தான்.

ஒரு காலத்தில் நாடாளுமன்றத்திற்குள் இருந்த எமது எம்.பிக்களில் பெரும்பாலானோர் அறிவாற்றல், ஆளுமை, பேச்சுத்திறன் என்பவை வாய்க்கப்பெற்று அங்கிருந்த வேற்றின உறுப்பினர்களாலும் மதிக்கப் படுபவர்களாய் இருந்தார்கள். இடையில் என்ன நடந்ததோ தெரியவில்லை? இன்று நாடாளுமன்றத்திற்குள் இருக்கும் நம் உறுப்பினர்களில் பலர் அத்தகைய மதிப்பைப் பெற்றவர்களாய் இல்லை என்பது மட்டும் உண்மை. இந்த மனவருத்தத்திற்குரிய விடயத்திற்கு, பதவிப் போட்டியில் தம்மைப் பலப்படுத்திக் கொள்வதற்காக, கட்சித் தலைவர்களில் சிலர் தகுதி அற்றவர்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளைப் பரிசாக வழங்கியதே காரணம் என்று நினைக்கிறேன்.

அப்படிப் பதவிகளைப் பரிசாகப் பெற்றவர்கள், நாடாளுமன்றத்தில் நின்று உரையாற்றுகின்ற போது நாங்களே நாணப்பட வேண்டி இருக்கிறது. ஓர் இனத்தின் தலைவர்களை வைத்துத்தான் அந்த இனத்தின் தரம் உணரப்படுகிறது. அப்படிப் பார்த்தால், நம் தலைவர்களில் பலரால் இன்று நம் இனத்தின் பெருமை குன்றுகிறது என்றே சொல்லவேண்டி இருக்கிறது.

நாடாளுமன்ற விவாதங்களில் அவர்களில் பலருக்கு இனப்பிரச்சினையை விட்டால் வேறெதுவும் பேசத் தெரியவில்லை. அவர்கள் திரும்பத்திரும்பக் 'குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டிக்கொண்டு' நிற்கிறார்கள். இனப்பிரச்சினை, பேசப்படக் கூடாத விடயங்கள் அல்ல என்பது உண்மையே! ஆனால் எல்லா விவாதங்களிலும் அதனைப் பற்றி மட்டுமே தொடர்ந்து பேசிக்கொண்டிருப்பது அவர்களின் அறிவின் எல்லையைத்தான் காட்டி நிற்கிறது. உலக அரசியல், பிராந்திய அரசியல், நாட்டு அரசியல் என்பவற்றில் ஆழமான அறிவை அவர்களிடம் காணமுடிவதில்லை.

இந்நிலையில் நாடாளுமன்றத்தில் தமிழினத்தைப் பெருமைப்படுத்தும் உறுப்பினர்களில் ஒருவராக கஜேந்திரகுமார் இருக்கிறார் என்பதில் எந்த வித ஐயத்திற்கும் இடமில்லை. தனது சிறந்த பேச்சுக்களால் தமிழினத்தை அவர் பெருமையுற வைக்கிறார் என்பதிலும் மாற்றுக் கருத்துக்கு நிச்சயம் இடமில்லை. அண்மையில் என்னோடு பேசிய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரே கஜேந்திரகுமாரின் ஆற்றலை மனந்திறந்து பாராட்டினார். கேட்கப் பெருமையாக இருந்தது.

இவ்வளவு தகுதிகள் இருந்தும் அவரை ஒரு சிறந்த தலைவராக அடையாளப்படுத்த முடியாமல் இருக்கிறது. காரணம், தனக்கான அங்கீகாரம் நோக்கி, பொருத்தமில்லாத இடத்தில் அவர் இருந்து கொண்டிருப்பதுதான். சொல்லப்போனால், அவர் தொடங்கியிருக்கும் கட்சியில் அவர் தனிமரமாய்த்தான் நிற்கிறார். ஒரு காலத்திலும் தனிமரம் தோப்பாகாது என்பது உயர்ந்தோர் முடிவு.

நடைமுறைச் சாத்தியமில்லாத இலட்சியத்தைப் பற்றிக் கொண்டு நிற்பதும், தீர்க்கதரிசனம் இல்லாமல் தேவையின்றி வலிமைமிக்க அண்டை நாட்டின் பகையைத் தேடிக்கொள்வதும், மக்களோடு கலந்து நடக்கத் தெரியாததும்தான் அவரிடம் நாம் காணும் குறைகள்.

என்னைப் பொறுத்தவரை தமிழர்களுக்குத் தலைமை வறுமை ஏற்பட்டிருக்கும் இன்றைய சூழ்நிலையில், ஆற்றல் மிக்கத் தமிழ்த் தலைவர்கள் அனைவரும் தம்பகைமை மறந்து ஓரணியில் ஒன்றுசேர வேண்டும். அதுபற்றிக் கஜேந்திரகுமாரும் சிந்திப்பது நல்லது. நல்ல பேச்சுக்களால் மக்களை ஈர்ப்பது மட்டும் ஓர் தலைவனுக்குப் போதிய தகுதி ஆகாது. வெற்றி பெற்றுக் காட்ட நாடாளுமன்றத்தில் நடப்பது ஒன்றும் பேச்சுப்போட்டிகள் அல்ல. அப் பேச்சுக்களால் காரியம் சாதித்துக் காட்டவேண்டும். இன்றைக்கு அவர் முன்வைக்கும் கொள்கைகள், அவரையோ, தமிழினத்தையோ உயர்த்த உதவப் போவதில்லை என்பது மட்டும் நிச்சயம்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * இருந்த இடத்தைவிட்டு இல்லாத இடம் தேடி எங்கெங்கோ அலைகிறார் ஞானத் தங்கமே! அவர் ஏதும் அறியாரடி ஞானத்தங்கமே! ஹி..ஹி..**

**4. கேள்வி:-** இன்று உலகிற்கு வர இருக்கிற மிகப் பெரிய ஆபத்துக்களென்று நீங்கள் எவற்றைக் கருதுகிறீர்கள்?

(08ஆம் பக்கம் பார்க்க)



# கியுல் ஓயா திட்டத்தை நடைமுறைப்படுத்த முன்னர் இடம்பெயர்ந்தவர்களுக்கு காணிகளை வழங்குக!

## சார்ள்ஸ் நிர்மலநாதன் வலியுறுத்து

வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் கியுல் ஓயா செயற்திட்டத்தை முன்னெடுப்பதற்கு முன்னர் அந்தப் பிரதேசங்களில் இடம்பெயர்ந்த மக்களுக்கு உரிய காணிகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் சபையில் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது நீர்ப்பாசன அமைச்சரிடம் கேள்வியெழுப்பி உரையாற்றும் போதே சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

அவர் மேலும் கூறுகையில் –

மகாவலி அதிகார சபையால் வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் தென்பகுதி மக்களைக் குடியேற்றிய போது அங்கு இடம்பெயர்ந்தவர்களுக்குரிய நிலங்கள் இன்னும்வழங்கப்படவில்லை. அவ்வாறுவழங்கப்படாது இருக்கும் போது அங்கு மகாவலி அதிகார சபை குடியேற்றியவர்களுக்காக கியுல் ஓயா திட்டத்தை செயற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது

மாவட்ட அபிவிருத்திக் கூட்டத்தில் இதற்காக அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. அவ்வாறு எந்தவித அனுமதியும் பெற்றுக்கொள்ளப்படவில்லை. தனிப்பட்ட ரீதியில் அபிவிருத்திக் குழுத் தலைவர் அந்த அனுமதியை வழங்கினாரா? என்று தெரியவில்லை. இதனால் முதலில் இந்தத் திட்டத்தை நிறுத்தி அங்கு இடம்பெயர்ந்தவர்களுக்கு உரிய காணிகளை வழங்கிய பின்னர் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துங்கள் என வலியுறுத்தினார்.

இதன்போது பதிலளித்த அமைச்சர் ரொஷான் ரணசிங்க கூறுகையில் –

மத்திய அரசாங்கத்தால் ஏதேனும் வேலைத்திட்டத்தை செய்யும் போதும் மற்றும் மகாவலி சட்டத்தின் படி வேலைத்திட்டத்தை முன்னெடுக்கும் போதும் அதற்கு பிரதேசங்கள் முக்கியமில்லை. இதற்கு பிரதேச அபிவிருத்திக் குழுவின் அனுமதியும் அவசியமென்றில்லை.

இந்த வேலைத்திட்டங்களின் ஊடாக செயற்படுத்தப்படும் விடயத்தின் ஊடாக 10 ஆயிரம் குடும்பங்களுக்கு குடிதண்ணீர்வசதிகிடைக்கும். அத்துடன்விவசாயத்துக்கு நீர் கிடைக்கும். இந்தப் பிரதேசங்களில் சுற்றுலாத் துறையை ஊக்குவிக்கவும் முடியும். இதன்மூலம் பிரதேசத்தில் உள்ள மக்களுக்கே நன்மைகள் கிடைக்கும். – என்றார்.



இவ்வேளையில் மீண்டும் கருத்து தெரிவித்த சார்ள்ஸ் நிர்மலநாதன், இந்தப் பிரதேசத்தில் பூர்வீகமாக இருந்த மக்களை இடம்பெயரச் செய்தே இந்தத் திட்டம் செயற்படுத்தப்படுகின்றது. இதனால் நன்மை அந்த மக்களுக்குக் கிடைக்கப் போவதில்லை என்பதையே கூறுகின்றேன். அந்த மக்களின் சொந்த நிலங்கள் பறிக்கப்பட்டுள்ள போதும். அவர்கள் தொடர்பில் எந்த அரசாங்கமும் நடவடிக்கை எடுக்கவில்லை. இது தொடர்பில் அதிகாரிகளுடன் கலந்துரையாடி தீர்மானங்களை எடுக்க வேண்டும். – என்றார்.

# பாட்டும் நானே? ....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

**பதில்:-** நீங்கள் கேள்வி கேட்டதைத் தகுதியாய் வைத்துக் கொண்டு இந்த விடயம் பற்றி அதிகம் பேசினால், நான் அறிவுள்ளவர்களால் முட்டாளாய்க் கருதப்படுவேன் என்பதை அறிவேன். அதனால் இதுபற்றி நான் பேசாமல், பேசத் தக்க ஒருவர் பேசியதையும், அது சம்பந்தமாக இன்று நடந்து கொண்டிருப்பவற்றையும் மட்டும் உங்கள் கேள்விக்குப் பதிலாகச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

இந்த நூற்றாண்டின் 'ஐன்ஸ்டீன்' என்று புகழப்பட்ட, சில காலத்தின் முன் வாழ்ந்து மறைந்த இயற்பியல் விஞ்ஞானி 'ஸ்டீபன் வில்லியம் ஹாக்கின்' அவர்கள், தன் மறைவுக்கு முன்பாக இவ் உலகிற்கு இனி வரப்போகிற ஆபத்துக்கள் சிலவற்றை அடையாளம் செய்துவிட்டுப் போனார். அவர் சொன்னவை சில, இன்று நடைபெறத் தொடங்கியிருக்கின்றன.

தயாரிக்கப்படும் இயந்திர மனிதர்களுக்குச் செய்யப்படும் தேவைக்கதிகமான அறிவூட்டல்களால் எதிர்கால உலகம், பெரும் ஆபத்துக்களைச் சந்திக்கும் என்பது அவரது முதல் கணிப்பு. கடந்த இரண்டு நாள்களுக்கு முன்பாக செய்தி அறிக்கையில், இது சம்பந்தமான ஓர் விடயத்தைச் சொன்னார்கள். இதுநாள் வரையும் இயந்திர மனிதர்களில், உத்தரவிற்குப் பணியும் ஆற்றலைத்தான் விஞ்ஞானிகளால் ஏற்ற முடிந்ததாம். மனிதர்களுக்கு உரிய உணர்ச்சிகளை அவற்றில் பதிக்க முடியவில்லையாம். ஆனால் தற்போது மென்மை முதலியவற்றை உணரும் ஆற்றலையும் இயந்திர மனிதர்களுக்குள் புகுத்திவிட்டார்களாம்.

இனி என்ன? வேகவேகமாக மற்றைய உணர்ச்சிகளையும் இயந்திர மனிதர்களுக்குள் ஏற்றிவிடுவார்கள். அதனால் வரப்போகும் ஆபத்து மிகப்பெரிது. விஞ்ஞான வளர்ச்சிசார்ந்த நாகரிகத்தால் இன்று ஏலவே மனிதர்கள் இயந்திரங்களாகிக் கொண்டு இருக்கிறார்கள். விரைவில் இயந்திரங்கள் மனிதர்களாகப் போகின்றன. இனி அவற்றிற்கும் காதல், கோபம், பொறாமை போன்ற மனித உணர்ச்சிகள் உண்டாகிவிடும். மனிதர்களை விடப் பலம் பொருந்தியவையாய் இருக்கப் போகும் இத்தகு இயந்திர மனிதர்களால், இயற்கைச் சமநிலை குழம்பப் போகிறது. மனித குலம் சந்திக்கப் போகிற முதல் ஆபத்து இது.

விரைவில் வெளிக்கிரக வாசிகளினுடைய வருகை பூமியில் நிகழப் போகிறது என்றும், வளர்ச்சி மிக்க அவற்றின் வருகையாலும் பூமி பேரழிவைச் சந்திக்கும் வாய்ப்பிருக்கிறது என்றும், பூமிக்கு வர இருக்கிற இரண்டாவது ஆபத்தைப் பற்றியும் ஸ்டீபன் அவர்கள் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார். இது பற்றியும் அண்மையில் ஒரு செய்தி வெளியாகியிருக்கிறது.

இதுநாள் வரையும் வெளிக் கிரகங்களிலிருந்து பூமிக்கு வரும் பறக்கும் தட்டுகள் பற்றிய செய்திகளையும், வெளிக்கிரக வாசிகள் ('ஏலியன்கள்') பற்றிய செய்திகளையும் வல்லரசுகள் மறைத்து வைத்திருந்தன. அண்மையில் அமெரிக்காவில் ஒரு நீதிமன்றம் வெளிப்படுத்திய உண்மையிலிருந்து மேற்சொன்ன விடயங்கள் எல்லாம் நிஜமானவை என்று தெரியவந்திருக்கிறது. சில தசாப்பதங்களுக்கு முன்பிருந்தே மேற்சொன்ன விடயங்கள் பூமியில் நிகழ்ந்து கொண்டிருந்தன என்றும், அண்மைக்காலமாக மேற்சொன்னவற்றின் வருகை மிக அதிகமாகி விட்டதென்றும் நீதிமன்றத்தில் ஒத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. வெளிக் கிரகங்களிலிருந்து வரும் 'ஏலியன்கள்' நம்மைவிட பல ஆயிரம் மடங்கு விஞ்ஞான வளர்ச்சி பெற்றவர்களாய் இருக்க வாய்ப்பிருக்கிறது என்கிறார்கள். அவர்களின் வருகையால் பூமியின் ஒழுங்கு ஒரு நிமிடத்தில் தலைகீழாக மாறிப்போகலாம். தாம் பெற்றிருக்கும் சிறிய ஆயுதபலத்தை வைத்துக் கொண்டு வல்லரசுகள் மற்ற நாடுகளை அடிமைப்படுத்த முயல்கின்றன. பெரிய பலத்தோடு வரப்போகிற 'ஏலியன்கள்' பூமியிலுள்ள அனைவரையும் அடிமைப்படுத்தவும் அல்லது அழிக்கவும் வாய்ப்பிருக்கிறது. இது பூமியை நோக்கி வந்து கொண்டிருக்கும் இரண்டாவது ஆபத்து.

மூன்றாவதாக இன்னொரு ஆபத்தும் வரப்போகிறது. இதுபற்றி ஸ்டீபன் சொன்னாரா? இல்லையா? என்பது பற்றி எனக்குச் சரியாகத் தெரியவில்லை. ஆனால் இதுவும் பூமிக்கு வரப்போகிற ஒரு பெரிய ஆபத்துத்தான். 'வயலெஸ்' போன்களுக்கான 6G 'ரெக்னோலஜியும்' (Technology) வரப் போகிறதாம். அதன் மூலம் இயந்திரங்களை மனித மூளையோடு இணைக்கலாமாம். நீங்கள் நினைக்க இயந்திரங்கள் அதன்படி இயங்குமாம். கேட்கவே பயமாயிருக்கிறது. இயந்திரங்களை மனிதர்களாக்கி, மனிதர்களை இயந்திரங்களாக்கப் போகிறார்கள். மெஞ்ஞானம் என்ன மெஞ்ஞானம்? விஞ்ஞானத்தின் முன்னால் அதெல்லாம் வெறும் தூசு தான் என்று சொன்னவர்களுக்கு இனித்தான் விஞ்ஞானத்தால் விளையப்போகும் ஆபத்து தெரியப் போகிறது.

**உலகநாதரின் ஒப்பீனியன் * 'அறிவினால் ஆகுவதண்டோ?' நம்ம வள்ளுவர் சொல்லாததா?**

# மாதிவல வீட்டுத்தொகுதி சிதைவுற்றதால் எம்.பிக்களுக்கு வியத்புரவில் வீடுகள்

## பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு

மாதிவலவில் இருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீட்டுத்தொகுதி சிதைவடைந்துள்ளதால் அங்கு தங்கி இருக்கும் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வியத்புர வீட்டுத் திட்டத்தில் தற்காலிகமாக வீடுகளை வழங்குவதற்கு பிரேரிக்கப்பட்டுள்ளது. மாதிவலவில் தற்போது வீட்டுத்திட்டம் ஒன்றுக்காக பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது என வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது சாணக்கியன் எம்.பி. எழுப்பிய இடையீட்டு கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தெரிவிக்கையில் –

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வியத்புர வீட்டுத்திட்டத்தில் வீடுவழங்க விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் அமைச்சரவை பத்திரம் ஒன்றை சமர்ப்பித்திருக்கிறார். இதுதொடர்பாக சமூக வலைத் தளங்களில் மிகவும் விமர்சித்து செய்தி தகவல் பரப்பப்படுகின்றது.

அதனால் எத்தனை பேருக்கு, யார் யாருக்கு வீடு வழங்கப்படுகிறது என்பதை வெளிப்படுத்த வேண்டும் என்றார்

அதற்கு அமைச்சர் தொடர்ந்து பதிலளிக்கையில் –

மாதிவலயில் இருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீட்டுத்தொகுதி சிதைவடைந்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் அறிவித்துள்ளனர் .

அதனை அடிப்படையாகக்கொண்டு, அந்த இடத்தில் வீட்டுத்திட்டம் ஒன்றுக்காக பிரேரணை வந்திருக்கின்றது. அதனால் மாதிவல வீட்டுத்தொகுதியில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தற்காலிகமாக வீடுகளை வழங்குவதற்கு கலந்துரையாடப்பட்டிருக்கின்றது.



அந்த சந்தர்ப்பத்தில்தான் கடந்த மாதம் 9ஆம் திகதி எமது நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் எரிக்கப்பட்டு நாசமாக்கப்பட்டன. தற்போது அந்த எம்.பிக்களில் பலருக்கு தங்குவதற்கு வீடு இல்லை.

அதனால் அந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அங்கு வீடுகளை வழங்குவதற்கு பிரேரிக்கப்பட்டிருக்கின்றது.

அத்துடன் மாதிவல வீட்டுத்தொகுதியில் தங்கி இருக்கும் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வியத்புர வீட்டுத்திட்டத்தில் தற்காலிகமாக வீடுகளை வழங்குவதற்கு நாடாளுமன்றத்தில் இருந்து பிரேரணை வந்திருக்கின்றது.

அவ்வாறு இல்லாமல் யாருக்கும் வீடுகளை வழங்குவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. – என்றார்.

# ரஷ்யாவிடம் இருந்து எரிபொருள் கொள்வனவுக்கு இருதரப்பு பேச்சுகளை ஆரம்பிக்குமாறு கோரிக்கை!

## ஜனாதிபதிக்கு சுயேச்சைக் குழுக்கள்

நீண்டகால அடிப்படையில் ரஷ்யாவிடம் இருந்து எரிபொருள் கொள்வனவு செய்வதற்கு இருதரப்பு பேச்சுகளை உடன் ஆரம்பிக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

9 சுயேச்சைக் கட்சிகளின் தலைவர்கள் ஜனாதிபதியிடம் எழுத்துமூலம் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

எனவே தங்களது கோரிக்கை தொடர்பில் கலந்துரையாடுவதற்கு விரைவில் சந்தர்ப்பம் வழங்குமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன், நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடி தொடர்பில் ஆட்சியாளர்கள் பொறுப்பின்றி செயற்படுகின்றனர் எனவும் 09 கட்சிகளின் தலைவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்

காலைக்கதிர் Kalaikkathir

# இந்திய – அமெரிக்க இரு தரப்பு உறவு கவனத்துடன் கையாளப்பட வேண்டும்




மேலோட்டமாகப் பார்த்தால் அமெரிக்க – இந்திய உறவு வெற்றி பெற்றதாகத் தெரிகிறது. இரு நாடுகளும் சீனாவை மையமாகக் கொண்டு ஊன்றிக் கவனித்துச் செயற்படுகின்றமையால், வணிக உறவுகள் சீராக ஆழமடைந்து வருவதால், அமெரிக்க – பாகிஸ்தான் உறவுகள் ஆழ்ந்த முடக்கத்தில் இருப்பதால், தமக்கிடையேயான உறவுக்கான பழைய தடைகள் பல மறைந்துவிட்டன என்று இரு நாடுகளும் கருதலாம்.

ஆனால், பெங்களூரு மற்றும் டெல்லியில் அரசியல்வாதிகள், சிந்தனையாளர்கள், மதத் தலைவர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் ஆகியோருடன் ஒரு வார தீவிர சந்திப்புகள் வேறு விதமான ஒரு முன்னெச்சரிக்கையையும் தருகின்றன.

அமெரிக்கர்களும் இந்தியர்களும் மூலோபாய மற்றும் பொருளாதார நலன்களைப் பகிர்ந்து கொள்கிறோம், நாங்கள் இருவரும் ஜனநாயகத்தை மதிக்கிறோம், ஆனாலும் மதிப்புகள் மற்றும் கருத்துக்களில் முக்கியமான வேறுபாடுகளால் நாங்கள் பிளவுபட்டுள்ளோம், கவனமாக நிர்வகிக்கப்படாவிட்டால், இந்த வேறுபாடுகள் ஒரு முக்கியமான நேரத்தில் அமெரிக்க – இந்திய ஒத்துழைப்பைத் தடம்புரளச் செய்துவிடலாம் என்ற எச்சரிக்கைதான் அது.

### வெவ்வேறு பார்வை

அமெரிக்கர்களும் இந்தியர்களும் ஒரே பிரச்சினையை வெவ்வேறு வழிகளில் பார்க்கிறார்கள். உதாரணமாக, உக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதலை உலக ஒழுங்கிற்கு அச்சுறுத்தலாக இந்தியா பார்க்கவில்லை.

ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய் வாங்குவதற்கான இந்தியாவின் தொடர்ச்சியான விருப்பத்தால் அமெரிக்கர்கள் குழப்பமடைந்துள்ளார்கள்.

அந்தப் பின்புலத்தில், உக்ரைன் விவகாரத்தைப் பெரும்பாலும் மேற்கத்திய பிரச்சினையாக இங்குள்ள பலர் கருதுகையில், அதற்கு மாறாக, அதனை உலகளாவிய விவகாரமாகக் காட்டும் விடயத்துக்கு ஆதரவைத் திரட்டும் மேற்கின் முயற்சி தொடர்பில் இந்தியர்கள் வெறுப்படைந்துள்ளனர்.

2020 ஆம் ஆண்டில் இந்திய எல்லைப் பகுதிகள் மீதான சீனாவின் தாக்குதல்களை ஐரோப்பியர்கள் கவனிக்கவில்லை என்று சுட்டிக்காட்டிய வெளியுறவு அமைச்சர் சுப்ரமணியம் ஜெய்சங்கர், கடந்த வாரம் ஸ்லோவாக்கியாவின் பிராட்டிஸ்லாவாவில் நடந்த மாநாட்டில், ஐரோப்பாவின் பிரச்சினைகளை உலகின் பிரச்சினைகளாகக் கருதும் மனநிலையில் இருந்து ஐரோப்பா வெளியே வந்து வளர வேண்டும் என்று கூறினார்.

### உலகளாவிய விதிகளை தனித்து எழுத அவர்கள் யார்?

பொதுவாக, அமெரிக்கர்களும் ஐரோப்பியர்களும் ஒன்றுகூடி உலகளாவிய விதிகளை எழுதுவதை இந்தியர்கள் உணரும்போது அவர்கள் முறுமுறுக்கிறார்கள்.

மதிப்புகள் அடிப்படையிலான சர்வதேச ஒழுங்கைப்பற்றி அமெரிக்க வில்சோனியர்கள் எவ்வளவு அதிகமாகப் பேசுகிறார்களோ, அந்த அளவுக்கு இந்தியர்கள் மேற்கத்திய ஆணவத்தைப் பற்றி கவலைப்படுகிறார்கள்.

பல இந்தியர்கள் வலுவான ரஷ்யாவை விரும்புகிறார்கள். அதேசமயம், ஜனாதிபதி பிடென் மற்றும் அவரது பல ஆலோசகர்கள் கட்டமைக்க விரும்பும் உலக ஒழுங்கிற்குள்ளிருந்து பாதுகாத்துக் கொள்வதற்குத் துல்லியமாக உதவக் கூடியதாக வரம்புகளுடன் வலுவான ஒரு சீனாவையும் அவர்கள் விரும்புகிறார்கள்.

இது, பின்காலனித்துவ வேளையில் மேற்கத்திய நோக்கங்கள் தொடர்பில் மேற்கத்திய நாடுகள் அல்லாத பல நாடுகளுடன் இந்தியா நீண்டகாலமாகப் பகிர்ந்து வரும் மேலதி சந்தேகத்தின் விளைவு.

### புதிய தேசியவாத இந்தியா

நீண்டகாலமாக ஆட்சியிலிருந்த காங்கிரஸ் கட்சிக்கு பதிலாக அதிகாரத்துக்கு வந்துள்ள இந்து தேசியவாத இயக்கமான பாரதிய ஜனதா கட்சி, அதன் கவர்ச்சிகரமான தலைவரான நரேந்திர மோடியைச் சுற்றி கட்டமைக்கப்பட்ட புதிய இந்திய வெளியுறவுக் கொள்கை மூலம் ஒரு புத்தெழுச்சியைக் கொண்டு வந்துள்ளது. இந்த புதிய தேசியவாத இந்தியா, மேற்கத்திய நாடுகளால் வடிவமைக்கப்பட்ட சர்வதேச நிறுவனங்களில் இந்திய இறையாண்மை மூழ்கடிக்கப்படாமல், இந்திய சக்தியை அதிகரிக்கவும் மேம்படுத்தவும் விரும்புகிறது.

இந்து தேசியவாத இயக்கத்தின் உள்நாட்டு நிகழ்ச்சி நிரலும் கூட அமெரிக்க – இந்திய உறவுக்கு சிக்கல்களை ஏற்படுத்தலாம்.

இந்துத் தேசியவாதிகளைப் பொறுத்தவரை இந்திய நாகரிகத்திற்கு முஸ்லிம் முகலாய பேரரசர்களின் ஆட்சி – அவர்களில் சிலர் பண்டைய இந்து கோவில்களை அழித்து, அவற்றின் இடிபாடுகளில் மசூதிகளை கட்டினார்கள் – எவ்வளவு பேரழிவை ஏற்படுத்தியதோ, அதற்கு சற்றேனும் குறைந்ததல்ல இந்திய நாகரிகத்திற்கு பிரிட்டிஷ் காலனித்துவம் ஏற்படுத்திய பேரழிவு.

### இந்து நாகரிகத்தை மீண்டும் இந்திய கலாச்சாரமாக ஸ்தாபித்தல்

ஆகையால் பிரிட்டிஷ் தரப்பைப் 'பக்கிங்' செய்து அனுப்பியமை மட்டும் போதாது இந்திய விடுதலை என்பது இந்து நாகரிகத்தை மீண்டும் இந்திய கலாச்சார மற்றும் அரசியல் வாழ்வின் மையத்தில் நிலை நிறுத்தி வைப்பதாக அமைய வேண்டும்.

அத்தோடு, இந்தியாவின் இந்து நாகரிகம் மற்றும் கலாச்சாரத்தை இஸ்லாம், கிறிஸ்தவம் மற்றும் மேற்கத்திய மதச்சார்பற்ற தாராளவாதத்திலிருந்தும் பாதுகாக்க வேண்டும் என்று பல பா.ஜ.க. ஆதரவாளர்கள் விரும்புகிறார்கள்.

இந்துத் தேசியவாதத்தின் இந்த வடிவம் சர்ச்சைக்குரிய கொள்கை முயற்சிகளுக்கு வழிவகுக்கிறது.

இந்தியாவில் உள்ள சிவில் சமூக குழுக்களுக்கு நிதியளிப்பதற்கான வெளிநாட்டு அமைப்புகளின் திறனில் கடுமையான கட்டுப்பாடுகள் கொண்டு வரப்பட்டுள்ளன. இவை, போர்டு அறக்கட்டளை முதல் கத்தோலிக்க திருச்சபை வரையிலான அமெரிக்க தொண்டு நிறுவனங்களின் செயல்பாடுகளைச் சீர்குலைக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றன.

மதமாற்ற எதிர்ப்புச் சட்டங்கள் கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம் மிஷனரி முயற்சிகளின் பாதையில் தடைகளை ஏற்படுத்துகின்றன.

மேலும் தாங்கள் சார்ந்த மதத்தை (நம்பிக்கையை) மீறி திருமணம் செய்ய விரும்பும் இந்துப் பெண்கள் சில நேரங்களில் கடுமையான சமூக மற்றும் அரசாங்க அழுத்தங்களை எதிர்கொள்கின்றனர்.

### மீண்டும் வகுப்புவாத வன்முறை

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இருந்தே இந்தியாவில் ஒரு பிரச்சினையாக இருந்த வகுப்புவாத வன்முறை சமீப ஆண்டுகளில் அதிகரித்து வருகிறது.

இந்திய முஸ்லிம்கள் தங்களின் தனிப்பட்ட பாதுகாப்புக் குறித்த அச்சத்தை அடிக்கடி வெளிப்படுத்துகின்றனர்.

இந்த விடயங்களை ஒட்டி அமெரிக்க மனித உரிமைக் குழு அதிக அக்கறையுடன் பதிலளித்துள்ளன அல்லது பிரதிபலிப்பைக் காட்டியுள்ளன.

### மத சிறுபான்மையினரின் உரிமைகள் அச்சுறுத்தலா?

மேலும் கடந்த வாரம் (அமெரிக்க) வெளியுறவுச் செயலர் ஆண்டனி பிளிங்கன் இந்தியாவை மத சுதந்திரம் மற்றும் மத சிறுபான்மையினரின் உரிமைகள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் நாடு என்று பெயரிட்டார்.

இத்தகைய அறிக்கைகள், அறிவிப்புகள் இந்திய சிறுபான்மை சமூகங்களுக்கு விடுவிப்பைப் பெற்றுக் கொடுப்பதை விட காலனித்துவ எதிர்ப்பு மற்றும் மேற்கத்திய எதிர்ப்பு உணர்வுகளைத் தூண்டுவதையே அதிகம் செய்கின்றன.

இந்து தேசியவாதம் மற்றவற்றுடன், இந்திய நாகரிகம் மேற்குலகின் தார்மீக மற்றும் ஆன்மீகத்துடன் சமமாக ஏற்று மதிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி நிற்கிறது.

அமெரிக்காவில் இனப் பிரச்சினைகள் மற்றும் வெகுஜன துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் உள்ளன என்று இந்தியர்கள் கூறுகின்றனர்.

இந்தியா எப்படி வாழ வேண்டும் என்று சொல்லும் உரிமை அமெரிக்கர்களுக்கு எது?

(மூலம்: வோல் ஸ்ட்ரீட் ஜேர்னல்)

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# தமிழ் மக்கள் எங்கு நிற்கிறார்கள்?



- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் -31**

சுமந்திரன் நாடாளுமன்றத்தில் மிகவும் காட்டமாக உரையாற்றி இருக்கிறார். இந்த நாடாளுமன்றம் மக்களது



ஆணையை இழந்துவிட்டது. தனித்துவத்தை, ஸ்திரத்தன்மையை, நம்பகத்தன்மையை, ஏன் மதிப்பு எல்லாவற்றையும் பறி கொடுத்து விட்டது, ஜனாதிபதி தனது பதவியில் தொடர்ந்து இருக்கவோ அல்லது இந்த நாடாளுமன்றம் மக்களைப்பிரதிநிதித்துவப்படுத்தும்சபையாக இயங்கவும் தகுதியற்றது எனவர் பேசியுள்ளார். அவை நியாயமானவை.

சுரணையும் தன்மானமும் இருந்திருந்தால் காலிமுகத்திடல் போராட்டம் தொடங்கியபோது, அன்றில் மே 19ஆம் திகதிக்குப் பின்னர், கோட்டாபய ஜனாதிபதி பதவியில் இருந்தும், மொட்டுக் கட்சியினர் தத்தமது ஆட்சிப் பதவிகளில் இருந்தும் விலகி இருப்பார்கள். விலகி இருக்க வேண்டும். மக்கள் தங்களுக்குத் தந்த ஆணையை மீளப் பெற்றுவிட்டார்கள் என உணர்ந்து இருக்க வேண்டும். அதனை அவர்கள் செய்யவில்லை. செய்யும் உபதேசமும் இல்லை எனத் தெளிவாக தமது வேலைகள், செய்கைகளினால் காட்டியுள்ளார்கள்.

சுமந்திரனின் இந்த வாதங்கள் நியாயமானவை. சுயமரியாதை உள்ளவர்களுக்குத்தான் அது உறைக்கும்.

இந்தச் சாரம் உள்ள வாதங்களை ஒரு வழக்கின் பகுதியாக சுமந்திரன் நீதிமன்றத்தில் வைத்திருந்தால் நீதிபதிகள் அவருக்குச் சார்பாக தீர்ப்பு தந்திருக்கலாம். ஆனால் சுயநலத்தில் தேங்கிக் கிடக்கும் சிறிலங்காவின் நாடாளுமன்ற அங்கத்தினர் முன் இது என்ன தாக்கத்தை தரும்? எவ்வளவுதான் நியாயங்கள் இருந்தாலும், அது சுமந்திரனின் பேச்சு என்று இருந்துவிட்டு போகும். நாடாளுமன்றம் அதை ஏற்று கலைக்கப்படப் போவதில்லை. பிரதமர் பதவியில் இருந்து ரணிலை நீக்கினாலும், கோட்டாவை நீக்கப் போவதில்லை. ரணில் தான் விலகி விடுவார் எனப் பயம் காட்ட, கோட்டாவோ விரும்பினால் விலகலாம் என்று பதில் தந்தார் என்று கூட செய்திகள் உண்டு.

இவையெல்லாம் – இந்த நாடாளுமன்ற உரைகள் எல்லாம் – கோரிக்கைகளை, வாதங்களை மெருகுகூட்டுவதை தவிர வேறு எதை எதார்த்தத்தில் செய்ய முடியும்? செய்யும்?

நாடாளுமன்றத்தை சுமந்திரனோ, கூட்டமைப்பினரோ, தமிழ் கட்சிகளோ கலைத்து விட முடியுமா? அல்லது கோட்டாவை பதவி விலக்கச் செய்யக்கூடிய வலுதான் அவர்களிடம் உண்டா?

**ஜனாதிபதி கோட்டாபய சொல்லும் செய்தி என்ன?**

காலிமுகத்திடல் போராட்டம் தொடங்கிய போது கோட்டாபய வீட்டுக்கு போக வேண்டும், ஜனாதிபதி ஆட்சி முறைமை நீக்கப்பட வேண்டும் என்ற கோங்கள் முன்னணியில் நின்றன. நாளடைவில் சர்வதேச ரீதியில் அவை பலத்த வரவேற்பைப் பெற்றன.

ஜனாதிபதி கோட்டாபயவும் வீட்டுக்குச் செல்லவில்லை. பதவியில்தான் இருக்கிறார். தன் காலம் முடியும் வரை போக மாட்டேன் என்றும் உறுதியாகத் தெரிவித்துள்ளார்.

முற்றாக ஜனாதிபதி முறைமையை நீக்கும் நடவடிக்கைகளும் தற்போது இல்லை. ஜனாதிபதியின் அதிகாரங்களை எவ்வளவுதூரம் குறைக்கலாம் என்று அபிப்பிராயங்கள் எடுக்கப்படுகின்றன. 21 ஆவது திருத்தச் சட்ட வரைவு எந்த அளவில் முன்னேற்றம் காணும் என்பதில், பஸிலின் மொட்டுக் கட்சி நாடாளுமன்றத்தில் பலமாக இருப்பதால் அதுதான் அவற்றைத் தீர்மானிக்கும்.

ஜனாதிபதியின் தேர்தல் கால செய்திகளில் ராஜபக்ஷக்கள் பயணித்த சிங்களப் பேரினவாத பயணத்தில், தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை சீர்குலைத்து, போரை வென்று, சிங்கள பௌத்தத்திற்கு மகுடம் சூட்டுவேன் எனச் சிங்கள மக்களுக்கும் மகா சங்கத்தினருக்கும் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றிய பின்தான் பதவியை விட்டுப் போவேன் எனத் தெளிவாக தெரிவிக்கிறார். மேலும் மஹிந்தவிலும் பார்க்க கோட்டாபயவுக்கு மகுடம் தந்த மகாசங்கமும் அவரில் நம்பிக்கை வைத்துள்ளது.

ஆகவேதான் 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் பாரிய விளைவுகளைக் கட்டுப்படுத்த ஜனாதிபதியின் அதிகாரங்களை முழுமையாக கட்டுப்படுத்தக் கூடாது எனத் தெளிவாகத் தங்களது நிலையை மகா சங்கத்தினரும் சேர்ந்து அறிவித்துள்ளார்கள். இதனைத் தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் அல்லது அறிந்து கொள்ள வேண்டும்.

தமிழ் மக்களின் அரசியல் தலைவர்களும் பரப்புகளும் 21 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டவரைவைக் குறித்து ஆராய்கின்றனர். அவர்களின் கருத்துக்கள், நிலைப்பாடுகள் நியாயமானவையாக இருந்தாலும், அவை பற்றிப் பேசலாமே ஒழிய, அவர்கள் அதன் வடிவத்தையோ, தொனியையோ மாற்ற இடம் இருக்கப்போவதில்லை என்பது திண்ணம்.

ஆக நாடு ஜனாதிபதி முறையில் ஆளப்பட்டாலென்ன, நாடாளுமன்றப் பெரும்பான்மையில் கொண்டு செல்லப்பட்டாலென்ன, தமிழ்மக்களது கோரிக்கை அரசியலுக்கு சிங்களப் பெரும்பான்மை செவிசாய்க்கவோ, இடமளிக்கவோபோவதில்லை. அது காலிமுகத்திடல் உணர்வாளர்களையும் உள்ளடக்கும். அவர்கள் கூட ஒருமித்த நாட்டில் இன, மத, அரசியல் வேறுபாடற்ற சமூகத்தைத் தான் பார்க்கிறார்கள். கூட்டமைப்பினர் கூட (சம்பந்தன், சுமந்திரன் உள்ளடங்கலாக) பிரிக்கப்படாத, பிரிக்க முடியாத, ஒரே நாட்டிற்குள் எனத்தான் பேசுகிறார்கள்.

ஆகவே தமிழ் மக்கள் தங்களது



அழிக்கப்பட்ட பொருளாதாரங்களையும் வாழ்வாதாரங்களையும் மீட்டெடுக்கும் வழிமுறைகளை யதார்த்தமான முறைகளில் சிந்தித்து அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும் .

சட்டியில் இருப்பது தங்களுக்கே பத்தாதபோது சிங்கள பேரினவாதம் முதலில் தங்களை மீட்டெடுக்கப் பாதைகள் வகுத்து, தமிழ் பகுதிகளின் வளர்ச்சிகளுக்கு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் தான் நடக்கும். அதே சமயத்தில் தமிழ் மக்களின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தி அவை தங்களது கைகளை விட்டுப் போகாத நிலைமையை அனுசரிக்கும்.



கோட்டாவின் சிங்களப் பேரினவாத நிலைப்பாட்டை இன்றைய புவியியல் மாற்றங்களின் அடிப்படையில் சமன் செய்ய வேண்டியவற்றை தமிழ் மக்கள் இந்தியாவின் கைகள் ஊடாக சர்வதேசத்திற்கு விட்டு விட்டு மறுபக்கத்தில் 'கோருகின்ற அரசியலை' சர்வதேச மனித உரிமைகள் மன்றில், மனித உரிமை மீறல்களின் அடிப்படையில் வலுப்படுத்த வேண்டும்.

அதை விட்டுத் தாங்கள் இன்னும் இதுவரை காலம் நடத்திக் கொண்டு வந்த அரசியல் கோரிக்கைகளைத் தொடர்ந்தும் சிங்களப் பேரினவாதிகள் இடம் பேசி, அவர்கள் மனம்திறந்து தரும் தீர்வுகளில் பெற்றுக்கொள்ளலாம் என்ற முட்டாள்தனத்தில் நடப்பதில் அர்த்தம் இருக்க முடியாது.

ராஜபக்ஷகளின் பௌத்த பேரினவாதப் புத்தகம் அல்லது மகாவம்சம் திறந்தே இருக்கின்றது. அதனுடன் முட்டி மோதுவது முடியாத காரியம். அதன் போக்கில் மனச்சாட்சியும் உறுத்தாது. அதனை சௌகரியமாக அரசாள வைப்பதற்கு, அது தரக்கூடிய எந்தத் தீர்வும் சலுகையும் அரசியல் சம்பந்தப் பட்டதாக இருக்க முடியாது. கம்பெனி வியாபாரமாகவே இருக்கும்.

சஜித்தின் ஊடாக ஏற்பட்டிருக்கக் கூடிய தேசிய அரசு கைநழுவிப் போய் விட்டது என்ற ஆத்திரங்களும் ஆதங்கங்களும் சிலருக்கு இருக்கலாம். ஆனாலும் அந்த தேசிய அரசும் பதவியை பெற்றுக் கொள்ள ஓர் ஒழுங்கு மட்டுமே. அரசியல் தீர்வின் அடிப்படையில் அது அமைய இருக்கவில்லை. அந்த அரசியலில் கூட நல்ல விடயங்களுக்கு இணக்கம் வந்திருந்தாலும் ஜே.வி.பி., விமல் வீரவன்ஸ, சம்பிக்க போன்ற சிங்களப் பேரினவாத பிரதிநிதிகள் அவற்றை நடைமுறைப் படுத்த விட்டிருக்க மாட்டார்கள்.

(வளரும்)





# கிளிநொச்சியில்
# ஐஸ்வர்யம் பெருவிருந்து மண்டபம்
# Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 076 306 8091

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road,
Kilinochchi



- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL
## BANQUET MEALS HALL





## FULL OPTION

### MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

### DESSERT
| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

SPECIAL MENU PACKAGE

### BEVERAGES
| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |